உ

சிவமயம்.

ஸ்ரீ வல்லீ தேவசேனுசமேத முருகவேள் துணை.

ஸ்ரீ மயிலையங்கிரி

மான்மியச்சுரு

இது

சீகாழி மகா-ள-ள-ஸ்ரீ சபாநாயக சதாசிவமுதலியாரவர்கள்

எஸ்டேட் காரிய நிர்வாஹகர்

பிரம்மஸ்ரீ

ரா. சுப்பராமய்யரவர்களால்

எழுதப்பட்டது.

காப்பிகள் 500] [விலை அணா நான்கு

1940.

பிரமாதி௵ தைமீ.

௨

சிவமயம்.

முகவுரை.

ஆர்கலி சூழ்ந்த பாருலகதனில் எண்ணரிய பிறவிகளிலும் கூன் குருடு ஊமை செவிடு பேடின்றி மற்றேனைய கண்டங்களி[illegible]லாது இப்பாரதகண்டத்தில் மானிடனுய்ப் பிறத்தல் மி[illegible]கும். அவ்வாறு மானிடனுய்ப் பிறந்தும், நல்விவேகமும், [illegible] கூடியவனுய்ப் பிறத்தல் அரியதினும் அரியதே யாகும். அவ்வாறு[illegible], இவ்வுலகினிற் சில மந்த மதியினையுடைய மாந்தர்கள் அடைவதற்கரியதான மானிட ஜனனமெடுத்தும் அதனை அநியாயமாய்க் கெடுத்துக் கொண்டு பிறவிக் கடலினைக் கடத்தற்கோர் அரிய மார்க்கத்தினைத்தேடி உய்யாது கேவலம் பசு பக்ஷி மிருகாதிகளைப்போல ஆகாரநித்திராமைதுனுதிகளிலேயே உழன்றுகொண்டு கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என வாழ்ந்து வாணுட்களையெல்லாம் வீணுட்களாகவேயாக்கி மண்ணிற்கிரையாகி மடிந்துபோகின்றனர். முந்திய கிருதத்திரேத துவாபர யுகங்களில் மானிலத்தவர் அரியதான தபங்களினுலும், அஷ்டாங்கயோகங்களினுலும், யக்ஞயாகாதிகர்மங்களினுலும் ஈசுவரனை ஆராதித்து இஷ்டசித்திகளையெல்லாம் இன்பமாயடைந்துவந்தனர். ஆனுல் இக் கலியுகத்தினிலோ ஆகறக்குமநேரம் ஆண்டவனைத் துதிசெய்தால் நீக்கமறும் பாசமெல்லாம் நில்லாது ஓடிவிடும். மேலும் பெறுவதற்கரியதான பெரும் பேறுகளையும் பெற்றிடலாம். அதனுலேயே "கலிசாது" எனக் கழறினர் பெரியோர். பிறவிக்கடலினைக் கடத்தற்கு பக்தியெனும் படகொன்றினுல் மாத்திரமேயன்றி மற்றேனைய சாதனங்களினுற் கடத்தலியலாது. பக்தியின்றேல் முக்தியின்று. அவ்வித பக்தியையும் ஒன்பதுவிதமாகப் புராணுதிகள் கூறியிருக்கின்றன. அவை யாவையெனில், சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்கியம், ஆத்ம நிவேதனம் என்பவைகளாம். இவைகளில் சிரவணமும் கீர்த்தனமும் எல்லோராலும் எக்காலத்திலும் சர்வ சுலபமாய் செய்யக்கூடியவைகளாகும். அவ்வாறே யானும் எனது மூன்றுவதாண்டினிலிருந்து மூலாதாரக் கடவுளரும், ஓங்காரப்பிரணவ ஸ்வரூபியுமான ஸ்ரீ விநாயகமூர்த்தியின் திருவுருவத்தினை ஒரு மாக்கல்லில் செய்து வைத்திருந்ததை வைத்துக்கொண்டு, அம்மூர்த்திக்கு

அபிஷேகார்ச்சனைகளைச்செய்து வணங்கியும், ஐந்தாவதாண்டினிலிருந்து ஐங்கரனுக்கிளையோனும், அகிலாண்டகோடிப் பிரமாண்ட நாயகனும் ஆதிமத்தியாந்தரகிதனும், ஆபத்பாந்தவனும், அநாதித ரக்ஷகனும், ஆச்ரிதஜன வாத்ஸல்யனும், அடியார்க்கெளியனுமான ஆறுமுகனின் திவ்ய திருவடிமலர்களில் சிந்தையை நிறுத்தி தாம்பிரத்திலாய கூரிய வேலாயுதமொன்றினை வைத்துக்கொண்டு அதற்கு அபிஷேக அர்ச்சனாதிகளைச் செய்து வணங்கியும், எட்டு வயதினில் சுந்தரியின் மைந்தனா [illegible]ந்தநாதனது திவ்வியத் திருவிளையாடல்களெல்லாம் நிறைந்த கந்[illegible]ன கசடற ஓதி உணர்ந்தும், பனிரெண்டாவது வயதி[illegible]ரின் தென்பாலுள்ள வேளூரில் விளங்கும் ஸ்ரீ செல்வ முத்துக்குமார முருகையனின் திவ்வியமான சேவையிலீடுபட்டும், பதினாறாவது ஆண்டினில் ஷோடச கலைகளும் நிறைந்து பௌர்ணமியில் உதயமாகும் பான்மதியினைப்போல் என் பக்தியும் பூரணமாகி எம்மதமும் சம்மதமே, எம்மூர்த்தியும் ஏகமூர்த்தியே என்னும் அபேத ஞானமுண்டாகிப் பிரகாசித்தது. அக்கால் யான் திருமயிலையங்கிரிக்குச் சென்று மயிலேறும் பிரானைக்கண்டு வணங்கிவந்து அவனது திவ்விய திருவிளையாடல்களையெல்லாம் ஒருவாறு உள்ளடக்கி "திருமயிலையங்கிரி முருகரலங்காரம்" என்பதனைப் பாடி முடித்து, நாற்பதாண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் அதனை அச்சிட்டு வெளியாக்கினேன். அதன் பின்னர், மேலே கூறிய பக்தியின் மார்க்கங்கள் ஒன்பதில் முன்னவைகளாகிய சிரவண கீர்த்தனங்களுக்கு முக்கிய ஆதாரமாயுள்ள அனேகம் புராணங்களில் "சுக்கிற்கு மிஞ்சிய ஔஷதமில்லை சுப்பிரமண்யனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை" "கலௌஸ்கந்த விநாயக:" என்னும் முதியோர்களின் மொழிகளின்படி கலியுகவரதனும் கலியுகப் பிரத்தியக்ஷ தெய்வமுமாகிய ஸ்ரீ சிவஷண்முக குருநாதனின் திவ்வியத் திருவிளையாடல்களும், லீலாவிநோதங்களும் செறிந்து விளங்கும்படியான மயிலம் புராணத்தினையும் ஒருவாறு சுருக்கி "மயிலையங்கிரி மான்மியச்சுருக்கம்" என்னும் ஒரு நூலினை எழுத என் மனதானது அவாவுற்று அவ்வாறே அஃதும் எழுதி முடிவுபெற்றது. அவ்வாறு எழுதியதற்கும் இரண்டு காரணங்களுள்ளன. அவைகள் என்னெனில், மயிலம் புராணமானது வடமொழிச் சுலோகங்களிலும் தென்மொழிச் செய்யுட்களிலும் கூடியிருப்பதினால், அவ்வம்மொழிகளில் வல்லுனரான பண்டிதர்களுக்கே பயன்படுவதா யிருக்கின்றவைகளேயன்றி, மற்றேனையோர்களுக்குச் சிறிதேனும் பயன்படத்தக்கவைகளாயில்லை. ஆதலின் அதனைச் சுருக்கி

தெள்ளிய தமிழ்நடையில், வசன ரூபமாக எழுதினுல் பண்டிதர்களுக் கேயன்றி மற்றேனைய பாமரர்கள், பாலர்கள், ஸ்திரீகள் முதலியோர் களுக்கெல்லாங்கூட மிக்கப் பயன்படக்கூடுமென்னும் காரணமானது ஒன்ருகும்.

சீகாழி ஸ்ரீமான் சபாநாயகமுதலியாரவர்கள் ஹிந்துஹைஸ்கூலில் உபாத்திமைத் தொழில்பூண்டு உயர் விவேகமும நல்ல ஞானமும் வாய்ந்த எனது அரிய நண்பர் மகா-ா-ா-ஸ்ரீ K. சுப்பிரமணிய ஐய்யர் அவர்களிடம் எனது அவாவினை யான் மொழிய, அன்னவரும் தென் மொழியில் செய்யுள் வடிவமான மயூராசல புராணமென்னும் புத்தக மொன்றினையீந்து எனக்கு உற்சாகமுண்டாக்கி தினே தினே தூண்டி வந்ததுந்தவிர, நந்தகோகுலத்தினில் ஆய்ச்சியரது தயிர் பால் வெண் ணெய்களையும், அடியேனது உள்ளத்தினையும் ஒருங்கே கவர்ந்த கள்வ ஞகிய கண்ணபிரான் ஸ்ரீமத் பகவற்கீதையில் அர்ச்சுனனுக்கு உபதே சித்துள்ளதுமான "பொறிகளுண்ணின்றவற்றின் புணர்ப்பெலா, மறிய வாட்டினன்போலாக்கைகடோறு, மறைவினின்று தன் மாயையினுல் வினைக், குறிகள் செய்விப்பனீசனென்றே கொள்வாய்" என்ற திவ்யத் திருவாக்கினைப்போலும்;

ஆட்டுவித் தாலாரொருவர் ஆடா தாரே
யடக்குவித் தாலாரொருவர் அடங்கா தாரே,
யோட்டுவித் தாலாரொருவ ரோடா தாரே
யுருகுவித் தாலாரொவ ருருகா தாரே,
பாட்டுவித் தாலாரொருவர் பாடா தாரே
பணிவித் தாலாரொருவர் பணியா தாரே,
காட்டுவித் தாலாரொருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே."

என ஒப்புவமையில்லா அப்பர்சுவாமிகளும்,

"ஊட்டுவிப் பானு முறங்குவிப் பானுமிங் கொன்ருே டொன்றை,
மூட்டுவிப் பானு முயங்குவிப் பானு முயன்றவினே,
காட்டுவிப் பானு மருவினைப் பாசக் கயிற்றின் வழி,
யாட்டுவிப் பானு மொருவனுண்டே தில்லை யம்பலத்தே."
"என்செய லாவதி யாதொன்று மில்லை யினித் தெய்வமே,
யுன்செய லேயென் றுணரப் பெற்றேன்." என

முற்றுந் துறந்த பட்டினத்தடிகளும்,

" அவனருளாலே யவன்றாள்வணங்கி " என திருவாசகமுரைத்த மணிவாசகரும்

" நினைப்பித்தா நித்தா நிமலா வெனநீ
நினைப்பித்தா லேழை நினைப்பே — நினைப்பின்
மறப்பித்தா லியானு மறப்பே னெவையும்
பிறப்பித்தா யென்னுலென் பேசு."

"ஊட்டு கின்றனை யுண்ணு கின்றனன்
உறக்கு கின்றனை யுறங்கு கின்றனன்பின்
காட்டு கின்றனை காணு கின்றனனீ
களிப்பிக் கின்றனை களிப்புறு கின்றேன்
ஆட்டு கின்றனை யாடு கின்றன
னிவ்வகில கோடியு மவ்வகை யானல்
தீட்டு மன்பருக் கன்ப நின்றனது
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே."

எனத் திருவருட்பிரகாசவள்ளலாராகிய ஸ்ரீராமலிங்கசுவாமிகளும்,

" அவனன்றி யோரணுவும் அசையாது " என மாமறையும் கூறியிருப்பவைகளையெல்லாமொத்தும், ஸர்வந்தர்யாமியான ஸ்ரீ சிவஷண்முகநாதன் எனது ஹிருதய கமலத்தினின்றும் எந்தனை ஆட்டிவைத்து எழுதும்படி செய்வித்ததானது மற்றோர் விசேஷமாகிய காரணமுமாகும். இவ்விருவகைக் காரணங்களினாலும்; மேலும்,

" மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் வணங்கினர்க்கு,
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

என்னும் பெரியார் வாக்கினைக் கடைப்பிடித்து, மூர்த்தி, தலம், தீர்த்தம்முறையே வணங்கும் மெய்யன்பரானோர்களுக்கு மிக்க உதவியாகுமென்னும் காரணத்தினாலும், முருகன் திருவிளையாடல்களினால் மேன்மையுற்றதும், மூர்த்தி, தலம், தீர்த்தங்களாற் சிறந்து விளங்குவதுமாகிய திருமயிலையங்கிரி மான்மியமானது ஒருவாறு சுருக்கி எழுதப்பட்டு இனிதே பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. இந்நூலினை, முன்னர் யான் எழுதிய " திருமயிலையங்கிரி முருகரலங்காரம் ", " ஸ்ரீராதாகிருஷ்ண சரிதாம்ருத ஸார ஸங்கிரஹம் " முதலியவைகளைப் பார்த்துத்தந்த, சீகாழி வித்வசிகாமணி மகா-ா-ா-ஸ்ரீ முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்களையே பார்வையிடச்செய்து அன்புடன் அளிக்கப்பெற்றேன்.

அன்னவர்க்கு ஆறுமுகன் திருவருளால் அஷ்டைசுவர்யங்களும், ஆயுராரோக்கிய திடகாத்திரமும், ஸர்வமங்களங்களும் உண்டாகி, ஸத்புத்ர பௌத்ரபிரபவுத்ரர்களுடன் கூடி தீர்க்காயுளுடன் வாழ்ந்துவர எல்லாம்வல்ல இறைவனை யான் எந்நாளும் ஏற்றிப்போற்றி இறைஞ்சி வேண்டுகின்றேன்.

இந்நூலினை ஸ்ரீமத், ஞானராஜதானியான இனும் பொம்மயபாளையம் திருக்கைலாய பரம்பரை பெரியமடம் சிவகஞ்சி மயூராசல நிவாச எதீஸ்வர கர்த்தரான மயிலம் தேவஸ்தானம் ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்வம் இனும்தார்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு பரிவுடன் அளிக்கப்பெற்றுளேன்.

பொங்கும் மங்களம்
எங்கும் தங்குக.

சுபம்

இங்ஙனம்,

சீகாழி 2—1—40.

ஸ்ரீ சிவஷண்முககுருநாதனின் தாசானுதாசன்
ரா. சுப்பராமன்.

உ

சிவமயம்.

சீகாழி வித்துவசிகாமணி
மகா-௱-௱-ஸ்ரீ, ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை
அவர்கள் இயற்றியது.

சீர்சா லம்மான் மடமகளுந் தேவர் கோமான் றடமகளுஞ்
சிறந்து விளங்கச் சித்தர்கணஞ் சேவித் திறைஞ்சச் செவ்வேள்வாழ்
கார்சால் வரையின் மான்மியத்தைக் கமல வாவிப் பெருமையொடும்
களிக்கும் பால சித்தருளங் கனியக் கூறி இன்பமுற்றார்
பார்சால் காழி வளநகரில் பருதி யென்ன வந்துறைந்து
பார்க்குங் கலைதேர் அந்தணர்தம் பண்பார் குலத்துத் திலகமன்னார்
ஏர்சால் செல்வம் பலதரும மிவற்றால் கீர்த்தி வளங்கொண்ட
ஏந்தல் சுப்ப ராமய்ய ரென்னுந் தவத்தின் றயாநிதியே.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனம் வித்வான்
மகா-௱-௱-ஸ்ரீ, நா. இராமசாமிப் பாவலர் அவர்கள்
இயற்றியது.

கலிவிருத்தம்.

அப்ப னாகி யமர் பரன் காழிவாழ்
சுப்ப ராமச் சுகுண ருரைத்திடும்
தப்பி லாமயி லைத்தட மான்மியம்
இப்பு விக்கண் இயைத்திடும் இன்பமே.

சுபம்.

இராமநாதபுரம் ஜில்லா சிவகெங்கை சமஸ்தானம்
வேம்பத்தூர் வித்வான்களில் ஒருவராகிய சௌந்திரபாரதியாரவர்கள்
புத்திரர் பிரம்மஸ்ரீ

அம்பிகாபதி பாரதியாரவர்கள் பாடியது.

பகுதான்ய௵ தைமீ 17உ (30—1—1939.)

பூவளர்சோலை திகழ்வுறுங்காழிப் பொற்பதி யமர்ந்திடுங் கவிஞன்
பாவளர்புலவர் மதித்திடும்நல்ல பண்பமர் சுப்பரா மய்யன்
மாவளர்யானை வள்ளியின்காந்தன் மருவிடும் சிகிமலைக் கதையை
கோவளர்மன்னர் குவலயமுணரக் கூறின னன்பொடு மாதோ.

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீன வித்வான்
"சித்தாந்த சைவப்பிரசாரக" உறையூர் மகா-ள-ள-ஸ்ரீ

தே. பெரியசாமிபிள்ளையவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கயிலைமலை அமர்கருணைக் கடவுள்ளம் களிக்கவரு
கந்த வேளாம்
அயிலையேந் தியபரம அருட்குருமா மணிநாளும்
அமர்ந்து வைகும்,
மயிலைமலை மான்மியத்தை மதுரமிகு செந்தமிழின்
வழுத்தி னூல்
வெயிலையுமிழ் மணிமாடக் காழிசுப்ப ராமனெனும்
வித்துவான் ஸ்ரீனே.

INTRODUCTION.

Our Bharatha varsha of many glories has the unique honour of rearing up her children in an atmosphere of faith in God and selfless devotion to Him. This spiritual greatness of our land is undoubtedly due to the Avatar of God in the form of Lord Subramania with Valli and Thaivanai. Among the holy shrines dedicated to the worship of the Lord Subramania the hill temple at Mailam with its imposing architectural grandeur and the thrilling image of Subramania, is a sight for Gods to see. About the sacred shrine and her history Mahavidvan Namasivaya Navalar has sung in exquisite verses full of priceless gems of wisdom and truth called out from the four vedas. This work was published from Namasivaya Navalar's disciple in 1911. Later on, Mayurachalapuranam was re-edited and published by Sivagnanabalaya Swamigal of the Bomapalayam mutt with slight alterations and paraphrase of the verses wherever necessary.

Still, a connected and lucid account of the shrine in prose has been a longfelt want. The author of this sweet work Brahmasri R. Subbarama Iyer, a true devotee of Muruga even from his fifth year, has brought to bear all his well-digested knowledge of Philosophy, Literature and Religion on this useful and brilliant compilation viz. "**Sri Mailayangiri Manmiya Churukkam**" in Tamil prose.

The talented author with his gift for inspirational songs in Tamil has, in the present work, not only given a beautiful account of the sacred abode of Lord Subramania but enshrined in it sublime ideals and philosophical truths to serve as beacon lights for all time to come.

In commending this small but none the less valuable work to all lovers of truth and devotees of Lord Subramania, I may be permitted to observe that work of this type is bound to stimulate the drooping spirits and elevate the Jeevatma or the individual soul to harmonise with the Paramatma, the universal soul.

Om Tat Sat.

S. M. Hindu High School,
Shiyali. 7th March, 38.

K. SUBRAMANIAN,
Assistant.

சருக்க அட்டவணை.

ந.	விஷயம்.	பக்கம்.
1.	நைமிசாரண்யச்சருக்கம்.	3
2.	திருக்கைலாயச்சருக்கம்.	5
3.	பாலசித்தர் திருவவதாரச்சருக்கம்.	13
4.	மலையுற்பவமுரைத்தசருக்கம்.	15
5.	பாலசித்தர் தவம்புரிசருக்கம்.	19
6.	தேடிவருந்துசருக்கம்.	21
7.	யுத்தச்சருக்கம்.	22
8.	அருள்புரிந்தசருக்கம்.	24
9.	திருமணச்சருக்கம்.	25
10.	தீர்த்தமகிமைச்சருக்கம்.	28
	மயிலம் திருப்புகழ்.	33
	முருகன் துதி.	34
	முருகன் கும்மி	35



உ

சிவமயம்

ஸ்ரீ சித்தி விநாயகன் திருவடி சரணம்

ஸ்ரீ சிவஷண்முக குருநாதன் துணை

ஸ்ரீ மயிலையங்கிரி மான்மியச் சுருக்கம்

விநாயகர்.

* பத்திவிஞாணசலமராப்படைத்தபரனருண்முன்னோன்பனைக்கை
வண்கோட்,
டத்திவிநாசம்பெறவேயொருகோட்டாற்றடிந்துவளமமரர்க்கீந்து,
முத்திவினவியமுனிவர்க்கருள்புரிந்துமயிலைமலைமுகட்டில்வாழுஞ்
சித்திவினாயகனடியைநித்தியநாந்தொழுதுபவஞ்சிதைத்தல்செய்வாம்.

சபாநாயகர்.

* வானந்தங்கடந்திலகுசெஞ்சடிலமோடுழையுமழுவுமாடத்,
தேனந்துமலர்க்கரத்தாற்றெழும்புலியும்பதஞ்சலியுந்தெரிசித்தாட,
மீனந்தமாங்கண்ணாலுமைநாடக்கனகமன்றில்விளங்கியென்று,
மானந்தநடம்புரியுமொருபொருளினிருசரணையகத்துள்வைப்பாம்.

சிவகாமியம்மை.

* மலைவல்லியம்பலவன்வாமவல்லியகிலாண்டவல்லியென்றுந்,
தலைவல்லிவேணுபுரமகற்களிக்கப்பால்பெருகுஞ்சாந்தந்தோய்ந்த,
முலைவல்லியடியவரைக்கருக்குழியாழாதெடுத்துமுத்திநல்குங்,
கலைவல்லிசிவகாமவல்லிபதஞ்சொல்லிநிலைகண்டுவாழ்வாம்.

விசுவேசர்.

* பசுவேசற்பதியடங்கும்பாசமறிலெனப்பகர்ந்தபாலனுஞ்சித்,
தசுவேசப்புங்கவனேயயதற்குச்சான்ருகத்தன்பால்வைத்தோன்,
முசுவேசிற்பொழிருவுமயிலேமலேவிசாலாட்சிமுதல்விபாகன்,
விசுவேசப்பெயரிலிங்கவடிவுடைப்பெம்மான்சரணம்விரும்பி
வாழ்வாம்.

சுப்பிரமணியர்.

* முந்தனைமாரறுவர்முலையருந்தியவாயினனிமயமுளைத்தவல்லி,
தந்தனையனறைகமழுங்கடம்பணியுந்தடம்புயனுஞ்சாமிநாதன்,
வந்தனைசெய்பவருளத்தினமுதமணிமயிலேமலைவாழும்வைவேற்,
கந்தனைநற்சிந்தையில்வைத்தெந்தமைவாதிக்கும்வினைகளைந்து
வாழ்வாம்.

* பவமாதித்துயரகற்றியடைந்தவர்க்கின்பருண்மயிலைப்பருப்பதத்தி,
னவமாநற்குறக்கொடியைத்தெய்வானைப்பிடியையமணநயந்துதூய,
தவமாமெய்க்கொண்டிலகும்பாலசித்தற்குயாருளைத்தந்தன்னேறுக்குச்,
சிவஞானதேவனெனப்பெயரருள்சண்முகத்தேவன்றிருத்தாள்
சேர்வாம்.

ஸ்ரீ ஸ்காந்தபுராணம்.

அருவமு முருவமாகியனுதியாய்ப் பலவாயொன்ருய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்குதித்தன னுலகமுய்ய. (7)

செஞ்சுடரனந்தங்கோடி செறிந்தொருங் குதித்ததென்ன
விஞ்சியகதிர்கான்றுள்ளம் வியன் பெருவடிவைநோக்கி,
நெஞ்சகந்துலங்கி விண்ணோர் நின்றனர் நிமலமூர்த்தி,
யஞ்சன் மினஞ்சன் மினென்றருளின னமைத்தகையால். (8)

தெய்வயானையம்மை.

* கானமுறுங்கலைமகள்செங்கமலமகண்முதன்மகளிற்கருதிப்போற்று,
ஞானமகட்கொருபாகந்தருதேகனெங்களையனுளும்வாழ்த்து
மானமருமகள்சித்தன்மகளெனச்சொன்மாட்சிதருமகணற்கோட்டி,
ஞானமகளிந்திரனுக்கரியமகள்மருமலர்த்தாட்கன்புசெய்வாம் (9)

வள்ளியம்மை.

* புள்ளிமயில்வருபாகனிமயவரைமயிலுதவும்புதல்வன்சூரை,
யள்ளியயிலெனவயிலுக்கருளிறேனுறுமுகத்தம்மான்வேண்டத்,
தெள்ளியயிலெனவிடியைத்தந்தவனுக்குவகையருள்சிறப்பினுளை,
வள்ளிம்யிலைப்பணிந்துகள்ளமயலைத்தணந்துவாழ்குவாமே. (10)

சரஸ்வதி.

* தெள்ளோதப்பயக்கடலினரவணையிற்றுயில்கூருந்திருமாலுந்தி,
யுள்ளோதொணுவுவகைமீக்கொளவந்தவன்வதனமொருநான்கிற்கும்,
கள்ளோதிக்கயல்விழிச்செவ்வாயினெருமுகங்காட்டிக்காதலூட்டும்,
வெள்ளோதிமத்தினைநம்முள்ளமெனுங்கமலமதின்மேவச்செய்வாம்.

சிவஞானபாலையசுவாமிகள்.

* மாலயனுதியர்பரவுஞ்சிவகணத்தினதிபனுமைமகிழ்நனேவால்,
வேலையுதித்தேமயிலைமலைமேவிக்குமரனுடன்விழைபோராற்றிச்,
சாலவவனருடாங்கியன்னவனேடினிதமர்ந்ததவத்தர்போற்றும்,
பாலசித்தனுமெங்கள்சிவஞானதேசிகன்றுள்பணிந்துவாழ்வாம். (12)

---

* இக்குறிப்பிட்டவைகள் ஸ்ரீமயூராசலபுராணத்தினின்று எழுதப்பட்டுள்ளன.

1. நைமிசாரண்யச்சருக்கம்.

ஆர்கலிசூழ்ந்த அம்புவியின்கண்ணே, ஸ்ரீ பூமிப்பிராட்டியாருக்கோர் திலகம் போன்றதாய் விளங்கும் நைமிசாரண்யம் எனும் மகாபுண்யக்ஷேத்திரத்திலே ஸ்ரீ வேதவியாசமகரிஷியின் பிரியசிஷரான சூதபுராணிகர் பிராஹ்மம், பாத்மம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், பவிஷ்யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பிரம்மவைவர்த்தம்,

லிங்கம், வராஹம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மத்ஸியம், காருடம் பிரம்மாண்டம், என்னும் சைவவைணவாதி பதினெண் மஹாபுராணங்களையும்; ஸநத்குமாரம், நாரஸிம்மம், ஸ்காந்தம், சிவதர்மம், நந்தி, தூர்வாஸம், நாரதம், காபிலம், மாநவம், ஔசநஸம், பிரம்மாண்டம், வாருணம், காலீ, மாஹேசுவரம், ஸாம்பம், ஸௌரம், பாராசர்யம், மாரீசம், என்னும் பதினெண் உபபுராணங்களையும்; பாரதாதி இதிஹாஸங்களையும், பாங்குடன் சொல்லிவருங்கால்; அப்புராணங்களையெல்லாம் அதிபக்தி விநயவிவேகத்தோடும் ஆதியோடந்தமாய்க் கேட்டு ஆனந்தித்துவந்த சௌனகாதிமகாமுனிவர்கள், ஓர்நாள் சூதபுராணிகரைநோக்கி, ஸ்ரீ வேதவியாச மகரிஷியின் பிரிய சிஷ்யராகிய பௌராணிகச்சிரேஷ்டரே ! ஆறுமுகனது திருவிளையாடல்களையெல்லாம், முன்னே நாங்கள் ஆதியோடந்தமாய்க்கேட்டு அளவிலாஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தினோராயினம். ஆயினும், பின்னும் அவனது திவ்யத்திருவிளையாடல்களையும் கேட்கவேண்டுமென்னும் பேரவாவுடன் கூடினவர்களாயிருக்கின்றோம். ஆதலின், அகிலலோகஜனனியும் ஆனந்தவல்லியுமாகிய ஆதிபராசக்தியின் அருமைத் திருக்குமரனை ஸ்ரீ சிவஷண்முகவடிவேலன் தங்கித் திருவிளையாடல்கள்செய்த திருத்தலங்களுக்குள் மிகச்சிறந்துவிளங்கும்படியானது எந்தத்தலமோ அந்தத்தலத்தினை அடியேங்களுக்குக் கூறியருளல் வேண்டுமெனக் கேட்க, சூதபுராணிகரும் மிக்க மகிழ் வெய்தி குமரன் திருவிளையாடல்கள்புரிந்த குன்றுகளனேகம் உள்ளனவாயினும் அடைந்தவர்களின் ஆபத்துக்களைப்போக்கி, பாபங்களையெல்லாம்நீக்கி, தர்மார்த்த காம்யங்களையெல்லாம்உண்டாக்கி, மோக்ஷானந்தத்திற்சேர்க்கி, ஸர்வமங்களங்களையும் இனிதேதந்திடும் இன்பகரமான இகபரஸாதகமகிமைவாய்ந்த திருமயிலையங்கிரியென்னும் ஓர் நற்றலமானது, எந்நாட்டினுஞ்சிறந்த நன்னாடாகிய தொண்டைநாட்டின்கண்ணே எண்டிசைகளிலும் அநேகந் தீர்த்தங்களோடுங்கூடி ஆறுமுகவேலனைத் தனதகத்தேகொண்டு அதியுன்னதமாய் விளங்கிக்கொண்டிருக்கின்றது. அதன் மகிமையை ஆயிரம் நாவினையுடைய ஆதிசேஷனாலும் அரனயன் அரியே முதலாயினோர்களினாலும் அளவிடற்கரியதாகுமெனில், புன்மதியுடையோனான அடியேனால் எவ்வகையாக எடுத்துரைத்தற்கூடும்? ஆயினும் எனது குருமூர்த்தியாகிய ஸ்ரீ வேதவியாச மகாமுனிவரது அநுக்ரக பலத்தினாலும் ஆதிகாரணன் அருமைத்திருமருகனான ஆறுமுகனின் திருவருட்டுணையினாலும் ஏதோ என் புத்திக்கெட்டியவளவில், அம்மயிலையங்கிரி

மான்மியத்தையும், ஆறுமுகவேலனின் அரிய திருவிளையாடல்களையும் உரைக்கின்றேன்; நீவிர் சாவதானமாய்க் கேளுங்களெனச் சொல்ல ஆரம்பித்தனர்.

---

2. திருக்கைலாயச்சருக்கம்.

கேளீர் சௌனகாதி மகரிஷிகளே,

அகிலபுவனுதாரனும் ஆதிபராசக்தியின் அருமைத்திருநாதனும், இந்துவைச்சூடிய ஈசனும், ஆதியந்தமில்லா அருட்பெருஞ்ஜோதியும் அடியார்க்கெளியனுமான எனதையன் அமர்ந்தருளும்ஸ்தலங்கள் அநேகமாயிருப்பினும், இமயவல்லியை ஈன்றெடுத்தோனும் பர்வதராஜனுமான இமயகிரியின்கண்ணே இனிதுவிளங்காநின்ற கைலையங்கிரியே மிக்கச்சிறந்ததாகும். அதன்பெருமையினை அரி,பிரமேந்திராதியர்களாலும் ஆதிசேஷனாலும் அறைவதற்கரியதேயென்றால் என்னால் அதனைக்கூறுவதற்காகுமோ? ஸர்வசராசரங்களுக்கும் தாயாகும் பசுபதியின் பாதபத்மங்களைச்சுமக்கும் கைலையின்சிறப்பினைக் கடையேன் கழறுந்தரமன்று ஆயினும் அதனிடம் அமர்ந்துள்ள அந்திவண்ணனது திருவருளினால் உடையானிடமாதலின் தடையிலாமற் கூடியவரையில் யான் அறிந்தமாத்திரம் சொல்லுகிறேன்.

அக்கைலையங்கிரியானது வேதாகமாதிகளின் விதிபிசகாமற் பொருளினைச்சம்பாதித்து; பிரம்மசாரி, வானப்பிரஸ்தன், சன்யாசி, ஆதாரமானவராமலெதுறக்கப்பட்டவன், தன்னிடத்தே வந்திரந்தவன், இரப்போர், தென்புலத்தோர், தேவர்கள், விருந்தினர், சுற்றத்தார், என்னும் இப்பதின்மருக்கும் அப்பொருளினைப்பகுத்துக்கொடுத்துத் தானுமொருபங்கேற்றுப் பொறாமை, பேராசை, கடுஞ்சொல், கோபம், என்பனவற்றை அறவேயொழித்துத் தர்மஞ் செய்தோருடைய புகழினைப்போல் வெளுத்தும், காலையிலும் மாலையிலும் வேதாகமபுராணங்களைச்சிந்தித்துக் கைலாயபதியாகிய சாம்பவமூர்த்தியின் சந்நிதானத்தில்நின்று, அவரது துஷ்டஜனநிக்கிரக சிஷ்டஜனபரிபாலனமென்னும் அறக்கருணை மறக்கருணைகளைப்புகழ்ந்துரைத்து, மனங்களித்துத்தொழும் அடியார்களின் கண்களில்நின்றிழியும் ஆனந்தபாஷ்பம்போல் அருவிகள்சொரிந்தும், பஞ்சாக்ஷரசுவரூபியாகிய பரமசிவன்

தன்னை அடைந்தவரைத் தன்மயமாக்கிக்கொள்வதுபோலத்தன்னை யடைந்தவரைத்தன்னைப்போல் வெண்ணிறமாக்கியும், முப்பத்துமுக் கோடிதேவர்கள், நாற்பத்தெண்ணுயிரமுனிவர்கள், கருடகாந்தர்வ சித்த வித்தியாதரர்கள், சிவகணங்கள் பிரம்மாவிஷ்ணு இவர்கள் முதலான அளவற்ற அந்தரவாசிகள் வலஞ்செய்து வணங்கித்துதித்துவழிபடவும், சிவனடியார்களுக்கும் சிவனடியார்களைப் பூஜித்தவர்களுக்கும், காணியா க்ஷியாகவிளங்கியும், வெள்ளியங்கிரியெனும் பெயரினைவகித்து விளங்கு கின்றது.

மேலும், ஷோடசகலைகளும் நிறைந்த சந்திரனுக்கொப்பானநிறங் கொண்டவெள்ளியங்கிரியால், திசாதிசைகள்தோறும் வெண்மைதங்கிய பிரகாசத்தினைப்பொழிந்து ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நிலாத்தோற்ற மானது, தேனிறைந்தகொன்றையைச்சூடிய சிவபெருமானது நீண்ட ஜடாமௌளியிற்பிரகாசித்துக்கொண்டிருக்கும் மூன்றும் பிறையினும் மேலாகிய ஒளியினைச்செய்து கிரணங்களைவீசிக்கொண்டிருக்கிறது. அவ்விடத்திலிருக்கும் வெட்டாரவெளிகள், காடுகள், கமர்கள், முதலிய இடங்கள்தோறும் அனேகமாயிரம் அக்னிப்பொறிகள் எனச்சீறும் கண்களையுடையபாம்புகளின் நாகரத்தினங்கள் எங்கும் இருளில்லாமல் சூரியனது கிரணங்களைப்போற்சிவந்து ஜ்வலித்துக் கொண்டிருப்பதால் இருட்காலமும் பகற்காலம்போலிருக்கிறது. கொடி செடி முதலிய விருக்ஷங்களும், உளுத்த எலும்புகளும், தளிர்த்துத்தழைத்து உயிர்பெறும்படியாய், நாரதர் தும்புரு முதலாயினோர் பாடும்படியான நாதயாழினோசையானது பக்தகோடிகளைப் பரவசமாக்குகின்றது.

இவையுமின்றி சிவசங்கரனின் புஜமான மலைச்சாரலில் நவமணி களினலலங்கரித்ததேபோல் அணிந்துள்ள ஸர்ப்பாபரணங்களின் சுவாச மாகியகாற்றுனது அவர் சிரமீதுள்ள இளம்பிறையினது நிலவின் குளிர்ச்சியையும், செஞ்சடா மகுடமாகிய செவ்வானத்திற் பூந்தாது சொரியக்கட்டவிழ்ந்து மலரும் கொன்றைப்புஷ்பத்தின் வாசத்தையும் அச்சடாடவிச் செவ்வானத்திலிரானின்ற கங்கையின் சிறிய துளித் திவலையையுங் கலந்து மந்தமாருதம்போல் வீசிக்கொண்டிருக்கின்றது. வெள்ளிமலையின் பக்கங்களிலெல்லாம் மலையருவிகள் ஓடுந்தன்மை எப்படியிருக்கிறதென்னில், விஞ்ஞானத்தினல் ஆழ்ந்தமாதவர்கள் அக் கைலாயபதியினது கருணை வாரிதியின் கடாக்ஷ வீக்ஷண்யத்தினைத் தெவிட்டும்படியாகப் புசித்து தங்களுக்குள்ளே அடங்காமற்பெருகி வெளியிலோடும் பேரானந்த வெள்ளத்தினை ஒத்திருக்கின்றது.

பின்னும்; வேதங்களினொலியும், மகான்கள் துதிக்கும்படியான பேரோசையும், உடுக்கை டமரகம் தவளைசங்கு முதலிய வாத்தியங்களின் முழக்கமும், எப்போதுமிடைவிடாமற் சப்திக்கும்படியாகவுஞ் சந்திர சூரியர்கள் வலம் வந்து தொழும்படியாகவு மிருக்கின்ற அக்கைலையங்கிரியானது, பூமியிலவதரித்து மருத மரத்தினை யுந்திய மாதவன் யோக நித்திரைசெய்யும் பாற்கடலினைப் போன்றிருக்கின்றது. மூவுருவு மோருருவாகியமைந்த அழகிய பரமசிவன் வாழா நின்ற வெள்ளியங்கிரியைத் திரிகாலமுந் தொழுதேத்துதற்குத் தேவர்கள் கும்பல் கும்பலாகக்கூடி வருவது எத்தன்மைத்தென்னில், முக்குணம் நீங்கிய முளரித்தேனைநாடி மூவுலகங்களிலுள்ள அன்பென்னும் வண்டினங்கள் அருந்தவந்ததை யொத்திருக்கின்றது. தாயினுமினிய சாம்பமூர்த்தியானவர் சங்கரியுடன் தங்கிய வெள்ளிமலையில், உடுக்கை முதலிய வாத்தியங்கள் அனேக மாயிரமாயிரமாக அதிரும் பேரோசையானது, ஆதிகாலத்தில் ஆதிசேஷனானவன் மகமேருவினைக்கட்டி நிற்க வாயுபகவான் வீசியடித்த காற்றின் முழக்கத்தினை யொத்திருக்கின்றது. நிறைந்து நிலைத்து ஆத்மகோடிகள் தோறும் நடனஞ்செய்திராநின்ற பசுபதியாருக்கெதிரில் அப்சர கன்னியர்கள் அசைந்து கைகாட்டி ஆடும்காக்ஷியானது மின்னலைப்போன்ற பிரகாசத்தினையுடைய வல்லிக்கொடிகளானவைகள் காற்றினாலசையும் தகைமையைத் யொத்திருக்கின்றது. கற்பனைக்கெட்டாத கண்ணுதற்பிரான் கரியமாலின் சோதரியான நாராயணியுடன் களித்திருக்குமக்கைலையினுற்புறத்திலும், கோடி சூரிய சந்திரபிரகாசம் விளங்கும்படிக்கு ஆலயம் நிறைந்திருப்பது எப்படியிருக்கிறதென்னில், நான்கு வேதங்களின் முடிவினையுணர்ந்த வேதாந்த சிற்பராளுடைய மலமாசற்ற இருதயத்திற் கொப்பாயிருக்கின்றது.

இன்னும் ஓம் என்னும் பிரணவத்துடன் சிவபஞ்சாக்ஷரத்தினையுஞ் சேர்த்து ஆறெழுத்துக்களாக உச்சரித்து தேவர் முனிவர் முதலியோர்கள் எப்பொருட்குமிறைவராகிய ஈஸ்வரனது ஸகஸ்ர நாமங்களையும் எவ்விடத்தும் துதித்துக் கூவிப் புகழாநின்ற ஆரவார ஒலியானது பாற்கடலினைக் கடைந்தகாலத்தில், அமரரும் அசுரரும், வாசுகியும், மந்தரமும் கூச்சலிட்டதான பேரொலிக்கு மேலிருந்தது. ஸத்துவ முதலிய ஸத்திய நெறிகளுடைய முனீசுவரர்களின் கூட்டமத்தியிலிராநின்றதற்பரனை, நால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு

84-லக்ஷஜீவராசிகளையும் ஆக்கியளித்தனுக்கிரகஞ்செய்தருளுந்தாணுவை ஆயிரம் பணுமகுடமுடைய பாம்பின் படநீழலிற் செஞ்சடாமகுடந் திகழப்பொருந்திய திரியம்பகனை, செவிகளிலணிந்தகட்செவிக்குண்டலங்களானவைகள் நிலவினைத்தரானின்ற மூன்றும் பிறையுடன் நகைத்து நயந்து, மருவும்படியாயிருக்கிற மஹேசனை, முத்தாசனத்திலோர்பதமும், முயலகனது முதுகினிலோர்பதமும் பொருந்தியமூர்த்தியை, மரகதக்கொடிபடர்ந்த பவளமலைபோன்ற மங்கைபாகனை, காண்போருக்கினிப்பாகிய தேவாமிர்தத்தினுமினிக்கும் எண்டோளினையுடைய மானிடமேந்தியை, புலித்தோலாடையும், யானையுரிப்போர்வையும், சிரமாலையும், நகுவெண்டலையும் ஆகிய பராக்கிரமசின்னங்களையெல்லாம் பரித்தருளிய சங்கரசுயம்புவை, நால்வேதங்களினும் அறியப்படாத ஆலமர்க்கடவுளை, பாலாக்ஷகாலாந்தகனை, காமத்துவம்சியை, தனதகத்தே வைத்துள்ளதான அக்கைலையங்கிரியினது பெருமையை யாராலளவிடக்கூடும்? சுவர்க்க மத்திய பாதலமென்னும் முப்புவனங்களுக்கும் இறைவனுகிய கடவுளருக்கு அஃதிருப்பிடமாகில் அதனதுமாக்ஷிமையை யாரே எடுத்துரைக்கவல்லவர்களாவார்? எனஒருவாறுய் அக்கைலையங்கிரியின் பெருமைகளைக் கூறி மேலே சொல்லத்தொடங்கினர்.

இவ்வாறுகிய சிறப்புகளோடுங்கூடியதும், பார்த்தமாத்திரத்தினில் பசுக்களின் பாசபந்தங்களெல்லாம் பஞ்சாய்ப்பறந்தோடத்தக்க திவ்யமாகிய மகிமைவாய்ந்ததுமாகிய அக்கைலையங்கிரியில் நந்தீ பிருங்கி முதலிய பக்தகோடிகளும் சிவகணங்களும் சேவித்து அரஹரசிவசிவ சம்போசங்கர மகாதேவாவென வாயாரவழுத்திநிற்கவும், தும்புரு நாரதாதியர்கள் நல்லிசையுடன் நாரணனும் நான்முகனுங் காணு விமலனைப்பாடியாடிப் பரவசமடைந்து நிற்கவும், நவரத்னகசிதமான நற்பசும்பொன்னுலாய ஓர் சிம்மாசனத்தில் எவ்வுலகும் ஈன்றுளான எனதம்மை ஆதிசிவசங்கரீஸமேதனுய் பரமேசுவரன் தனதருமைத் திருக்குமரர்களாகிய ஸ்கந்தவிநாயகர்களுடன் கொலுவமர்ந்து வீற்றிருக்குங்கால், பிரமேந்திராதிசகலதேவதாகணங்களும் ஆங்குசென்று அப்பரம்பொருளின் அடிகளில் வீழ்ந்துவணங்கி;

"ஆதியேயண்டமுமனைத்துமாயொளிர்,
சோதியேகொன்றையந்தொங்கன்மௌளியாய்,
வாதியேமரகதவல்லியாளொரு
பாதியேபவளமாம்பரமரூபியே.

பையராவணிமணிப்பவளமேனியாய்,
செய்யவாய்மரகதச்செல்விபாகனே,
ஐயனேசேவடியடைந்தவர்க்கெலா,
மெய்யனேஎங்குமாய்விளங்குஞ்சோதியே.
முக்கணுநிலவெழமுகிழ்த்தமூரலுஞ்,
சக்கரவதனமுந்தயங்குவேணியு,
மைக்கயன்மரகதவல்லிவாழ்வுறு,
செக்கர்மெய்வடிவமுஞ்சிறந்துவாழியே.
பொங்கராவெயின்மணிப்பூணும்பேணுநீற்,
றங்கராகமுமுவந்தணியுமேனியாய்,
சங்கராமேருவெஞ்சாபம்வாங்கிய
செங்கராசிவசிவதேவதேவனே.
விண்ணிடைத்திரிபுரம்வெந்துநீறெழப்,
பண்ணுடைச்செந்தழல்பரப்புமூலவா
வெண்ணுடைக்காமனைஎரித்தபேரழற்,
கண்ணுடைக்கடவுளேகாலகாலனே.
தருவதுமுயிரெலாங்காக்குந்தன்மையு,
முருவறவொழித்தலுமூன்றனுடலே,
கருவராதொழிந்தவர்கருத்திற்கண்டுதேர்
ஒருவனையெம்மனோர்க்குரைக்கற்பாலதோ.
நித்தனேநிமலனேநிகழநின்னுமனே,
யத்தனேயடியவர்க்கெளியவண்ணலே,
பித்தனேயாதியந்தங்கள்பேசொணா,
முத்தனேயுயிர்தொறுமுலாயமுன்பனே."

* கருங்குவளைநிகர்மிடற்றெங்கண்ணுதலேமுத்தலைவேல்கனன்மான்
கையா,
மருங்குவளைந்திடநிமிர்ந்தமலைமலைமாதணிகடவுண்மணியேசூலா,
னெருங்குவளைக்குலமுராலும்பண்ணைதிகழ்தில்லைமன்றினிருத்தஞ்
செய்வோ,
யொருங்குவளைத்தடியரிடர்முக்குரும்பைக்கடிந்தருளுமம்பரேறே.

* மாலயனிந்திரன்முதலாங்கடவுளர்வந்தடிவணங்கிவாழ்த்துமூவா,
மூலமுதலாம்பொருளேமுனிவருளத்தகலாதமூர்த்தியேநின்,
சீலமுணர்ந்தித்துணையென்றியாவர்வழுத்துவர்வெள்ளிச்சிலம்பின்
பாலவிலோசனவரவாபரணசிவசங்கரவெம்பரமபோற்றி. [மேவும்,

* அன்பருளத்திடையகலாதாநந்தச்சுவைசுரக்குமமுதேயென்று,
மின்புருவமாயிலகுந்தவமேயத்தவமதனுலெய்தும்பேறே,
பொன்புணர்மான்முதலமரர்க்காய்ந்திரவியெயிறுகுத்தபோரில்வல்
லோய்,
நின்பெருமைசொலற்கெளிதோபொன்மலைவில்லேந்திண்டோ
ளிமலாபோற்றி.

ஜயாவிஜயீபவ, அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயக, ஆதிமத்தியாந்தரகிதா, அந்தகாசுர சம்ஹாரா, திரிபுராந்தகா, திவ்யமகாகுண்டல ஹாரகேயூர கடககங்கணதரா. சங்கரா, தற்பரா, கங்காதரா, கருணுகரா பார்வதீமனேஹரா, பக்தகர்க்கருள்வாய், ஹரஹரா, மகேசுவரா, பரமேச்வரா, ஸர்வேச்வரா, தேவா, ஆவா, காவா, மஹானுபாவா, ஐயனே ! சூலக்கையனே ! விபூதிதூளிதமெய்யனே ! கங்கைதங்குஞ்சிரத்தனே ! கபாலமேந்துங் கரத்தனே ! மதிசூடுஞ்சடையனே ! மால்விடையனே ! மாநாகப்பூண்கள் உடையனே ! நெற்றிக்கண்ணனே ! அந்திவண்ணனே! நிமலனே ! அமலனே ! விமலனே ! பார்வதியம்மைக்குப் பாதியுடலளித்தபரமனே ! பச்சைமாலும் பங்கயத்தோனும் காணமுடியாத அடிமுடியுடைய எம்மண்ணலே ! எனப் பலவாறுகத் துதித்துநின்று சொல்வாராயினர்.

ஸர்வலோகநாயக ! சங்கரசுயம்புவே ! இப் பூவுலகின்கண்ணே தேவரீரால் ஏற்படுத்தப்பட்ட வேதாகமங்களும், அதன்படிக்கான வேள்விகளும், சைவானுஷ்டானங்களும், ஸத்கர்மாதிகளும், ஸகல தேவதாபூஜைகளும், ஸர்வமும் நசித்துப் பாழாகிப் புறச்சமயக் காடு படர்ந்து செழித்து வளர்ந்து வருகின்றது. அகச்சமயங்களெல்லாம் அதோகதியாய்விட்டன. தர்மம் குறைந்தது. அதர்மம் நிறைந்தது. ஐயனே ! வையமே இதற்கோர் உபாயம் தேவரீர் உடனே சிந்தியாவிடில் உலகமே அஞ்ஞான இருள்மூடி அநியாயமாய்ஓடி அந்ததாமிஸ்ராதி அருநரகாதிகளிற்கூடி நன்முத்திநாடி நலம்பெறுமலேவாடி நாசமாய்விடுமென முறையிட்டனர்.

அம்முறையிட்டினைக்கேட்ட ஆதிபகவனும், அமரர்காள் ! அஞ்சன்மின் அஞ்சன்மின் அபயமளித்தோம். அஞ்ஞானத்தினைமாட்டி ஸுக்ஞானத்தினைநாட்டி, புறச்சமயப்பேய்களையோட்டி, மோகாதிகளைவாட்டி ஸுபோதானந்தத்திற்கூட்டி, சைவசமயாதி ஆசாரங்களை முன்போலவே பாராட்டி, முத்திநிலையினைக்காட்டி, அனுக்ரகித்தருளுவோமெனத்

திருவாய்மலர்ந்தருளினர். இதனைக்கேட்ட பிரமேந்திராதி ஸகல தேவ தாகணங்களுக்கும், வாடியபயிருக்கோர் மழைபோலும், தேடிய மருந்து சிக்கினதுபோலும், கூடிப்பிரிந்த நங்கையானவள் நாடிய நாயகனைக் கூடியதுபோலும், நாடித்திரிந்த சிஷனுக்குத் தேடிவந்தக் குருவினைப் போலும், தக்க சமயத்தினில் மிக்க ஆனந்தத்தினையூட்டியதாயிற்று. அவ்வமரர்களும் மகாபாக்யம் மகாபாக்யமென மகேசனைத் துதித்து, வாயார வாழ்த்தி, தத்தம் உலகங்களுக்குச் செல்லலாயினர்.

அனந்தரம் எனதன்னையாகிய ஆதிபராசத்தியானவள், ஜலக்கிரீடை செய்யவேண்டுமெனும் இச்சையை மேற்கொண்டவளாய், நச்சரவம்பூணும் நமதையன்வாழும் கைலயங்கிரிச்சாரலில், நாற்புறமும் சாலைகளும், நற்சோலைகளும், திருமதில்களும், அதன்மத்தியில், நன்மணங்கமழும் நற்றாமரைகளும், அல்லியும், ஆம்பலும், நீலோத்பலங்களும், செங்கழுநீர்களும், செறிந்தும், அழகிய அன்னப்பறவைகளும், நீர்க்கோழிகளும், சக்கரவாகப்புட்களும், சாதகப்பக்ஷிகளும், நாரையும், கொக்கும், நல்வாத்துகளும், நயமுடன் சேர்ந்தும், ஸ்படிகக்கற்களினால் படித்துறைகளமைந்தும், பார்ப்பவர்களின் மனதானது பரவசமடையும்வண்ணம் அவ்வளவு ரமணீயமாய் விளங்கும் ரஞ்சிதமான கொஞ்சும் தடாகமொன்றினைச் சிருஷ்டித்து, சங்குகன்னனென்னும் ஓர்சிவகணத்தலைவனை விளித்து, யாவரேயாயினும் இங்கு இதனுட் புகவிடலாகாதெனக் கண்டித்து, காவலமைத்து, பூமகள் நாமகள்ஸகிதம் புவனசுந்தரியாகிய பார்வதிதேவியும், மிக்க மகிழ்ச்சியுடன் தக்க ஸகிகளோடுங் கூடி வெகுஉல்லாசமாய், சரசசல்லாபத்தோடும் ஜலக்கிரீடைசெய்யலாயினள்.

அக்கால், சந்திரஜடாதர சங்கரசுயம்புவாகிய ஸாம்பசதாசிவமூர்த்தியானவர், தமது பிரியாவிடைநாயகியாராகிய சிவகாமவல்லியெனும் என் அன்னையைக் காணாது தேடிவருங்காலையில், ஆங்கு நூதனமாய்த் தோன்றும் சாலைகளும் சோலைகளும் சூழ்ந்த ஓர் அரிய தடாகத்தினைக் கண்ணுற்று, அதனுட் பிரவேசித்து நோக்கலும், அதனைக்கண்ட பர்வத ராஜனின் திருக்குமாரியான என்னம்மையும், பாற்கடலில் பிறந்த பங்கஜவல்லியும், கலைவாணியும், மற்றுள நாரீமணிகளும், மிக்க லஜ்ஜையுடன் கூடியவர்களாய் தத்தம் கலைகளையணிந்து மறைந்தாராயினர்.

அனந்தரம், பரமேசுவரன் மிக்க கோபத்தோடுங்கூடியவனுய்ச் சங்குகன்னனை நோக்கி, "அம்மையானவள் ஜலக்கிரீடை செய்கிறுள்

என்பதனைத் தெரிவியாமல் வாளாவிருந்தனை யாதலால் பூவுலகின் கண்ணே நீ மானிடனாய்ப் பிறக்கக்கடவாய்" எனக்கடுஞ்சாபமிட்டனன். இதனைக்கேட்டதும், இடியோசையினைக்கேட்ட படமெடுத்தாடும் பன்னகமேபோல் பக்தனான சங்குகன்னனும் மிக்க நடுநடுங்கி சிந்தாகுலத்தோடுங்கூடிய மனத்தனாய் சங்கரசுயம்புவின் பங்கஜமலர்ப்பாதங்களில் வீழ்ந்து வணங்கிப்போற்றி, எனதையனே! அடியார்க்கருள் மெய்யனே! அடியேன் செய்த அற்பப்பிழைக்கு இத்தகைய கொடுஞ்சாபத்தினை எனக்களித்தலும் தகுமோ, இது தர்மமோ, இது நீதியோ, தீனதயாபரமூர்த்தியே! இவ்வேழையின்பால் இரக்கம்வைத்து இச்சாபமானது எந்தனைவிட்டு நீங்கும் உபாயத்தினைப் பணித்தருளல் வேண்டுமெனப் பன்முறையும் பணிந்துபோற்றி வேண்டித் துதிக்கலாயினன்.

* முக்குணமாய்மூவுருவாயாக்கல்காத்தன்முடித்தலிவைமுடித்தருளு
முதல்வாபோற்றி,
யக்கறுகுகொன்றைதும்பைசெக்கர்வேணிக்கணிந்தருளுந்தற்பரனே
யரனேபோற்றி,
யிக்குவிலைக்கையிலேந்துமதனன்மாளவெரித்தநுதற்கண்ணனே
யிறையேபோற்றி,
தக்கவர்களுளமகலாதானந்தத்தேன்றண்மாரிதூவுசலதரமேபோற்றி.

* மலைக்கொடிக்கோர்பாலுதவியிலங்கும்வெள்ளிமலைக்கிழவனேபவள
வண்ணாபோற்றி,
யலைக்கடுவைமிடற்றடக்கியமராவியழியாமலன்றளித்தவரசேபோற்றி,
கொலைக்கரியையலக்கணுறவிரித்துப்போர்த்தகொற்றமிகுமுவிலைவேற்
கோவேபோற்றி,
சிலைக்கிசையநெடுஞ்சைலங்குனித்தவெற்றிச்சேவகனேபாவகத்தின்
சிறப்பேபோற்றி.

* விடநாகமணிந்ததிருவுருவாபோற்றிவிடைக்கொடியேந்தியகரத்து
வீராபோற்றி,
திடமிகுந்தவிடபமுகைத்தோனேபோற்றிசிறுமானைத்தரித்தருளுஞ்
சிவமேபோற்றி,
படநாகக்கங்கணனேபோற்றிவேதன்பஞ்சமுகத்தொருமுகத்தைப்
பறித்தாய்போற்றி,
வடநிழலிற்சனகாதிநால்வருக்கும்வாய்மலராதுண்மையினை
வகுத்தோய்போற்றி.

* அனந்தகுணனுகியெல்லாந்தானேயாகியங்கிங்கெனுமலெங்கு
மமர்ந்தாய்போற்றி,
நினைந்தவடியாருளத்தின்விழைந்தவெல்லா நிறைதரவங்கவர்க்கருளு
நிதியேபோற்றி,
சுனந்தருக்காவாலவனந்தன்னில்வானந்தூக்கியபொற்பாதநடத்
துரியாபோற்றி,
சினந்தருவெம்பிறவியெனுங்கோடைதீர்ப்பான்செறிந்துவருடிக்கு
முகிற்றிரளேபோற்றி.

இவ்வாறு, பற்பலவாருகத் துதிக்கும் சங்குகன்னனின்பால் கருணைக்கடலாகிய காளகண்டனும் மனதிரங்கி, அச்சங்குகன்னனை நோக்கி, " அப்பனே! இப்பூவுலகின்கண்ணே வேதாகம சாஸ்திராதிகளெல்லாம் பேதாபேதமாகிச் சீர்குலைந்து சிதறிப்போயிருப்பதினுல் நீ இத்தரணியின்கண் மானிடனுய்ப்பிறந்து, அவைகளையெல்லாம் முன்போலவே சீர்பெறச்செய்து, நிலைநிறுத்தி, நமது சைவானுஷ்டான முறைகளையெல்லாம் நன்கு உபதேசித்துவரும் நாளில், நமது திருக்குமாரனுகிய முத்துக்குமாரனும் நீயும், ஓர்காலத்தில் சமர்புரியும்படியான சமயமானது நேரிடும். அக்கால், அக்குமாரனது அங்கஸங்கத்தினுல் உனது சாபவிமோசனமாகி சிவசாயுஜ்யமடைவாய்" எனக்கூறி அந்திவண்ணனும் அந்தர்த்தானமாயினுன்.

3. பாலசித்தர் திருவவதாரச்சருக்கம்.

இவ்வாருகச் சிவபிரானின் சாபப்பெற்ற சங்குகன்னனென்னும் சிவகணத்தலைவனுனவன், தாயார் கர்ப்பவாசனுகிப் பத்துமாதந்தங்கி பின்னர் அவள் நெருங்கிய யோனித்துவாரத்தின்வழியே வருதலானது மிக்கத் துன்பத்திநும் துன்பமேயாகுமெனவெண்ணி, கீழ்க்கடலின்கண்ணே ஜடாமகுட காவிகாம்பர தண்டுகமண்டலதாரியாய், ருத்திராக்கமாலிகாபரணனுய், விபூதி உத்தூளிதமெய்யனுய், சிவாகம ஸாரங்களையெல்லாம் ஒருங்கே திரட்டியுபதேசிக்கும் ஓங்காரப்பிரணவ பஞ்சாக்ஷர நாவன்மையனுய், சிவலிங்கத்தினை ஹிருதயத்திற்றாித்த வீரசைவ

சிகாமணியாய்ப் பத்துவயதினையுடைய பாலகுமாரனாய்த் திருவுருக் கொண்டு, திவ்யமான தேஜசுடன் விளங்கினான். அனந்தரம், ஆங்கோர் ஆச்சிரமம் அமைத்து அதிலிருந்துகொண்டு சிவயோகநிஷ்டாபரனாய் தன்னைவந்தடைந்த பக்தர்களுக்கும், சித்தர்களுக்கும், சிவாகமாசாரங் களையெல்லாம் செவ்வனே எடுத்துரைத்து சிவானந்தபோதத்தினை ஊட்டிவரலாயினான். அங்கு வந்து உபதேசம்பெற்ற பத்தர், சித்தர், முத்தர், மற்றேனையோரும் அன்னவனது முகவசீகரத்தையும், தெய்வத் தன்மையினையும், ஆகாராதிகள் சிறிதேனுமின்றி அருமையானதோர் ஒப்பற்ற சிவயோகம்புரிந்துவருதலையும் கண்டு அதிசயித்தவர்களாய், அன்று கல்லாலின்கீழமர்ந்து சனகாதி மகாயோகிகளுக்குபதேசித்த கைலைநாயகனான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியைப்போலும், மதுரைய்ம்பதி யின்கண்ணே ஸ்ரீமீனாக்ஷிசுந்தரியின் இன்பநாயகரான ஸ்ரீசோமசுந்தரக் கடவுளானவர் எல்லாம்வல்ல சித்தரைப்போல் வந்து லீலைகள்புரிந்த தைப்போலும், இம்மகானும் சித்தபுருஷனாய் விளங்குதலால், இவனுக் கும் "பாலசித்தன்" என்னும் திருநாமஞ்சூட்டி ஏற்றிப்போற்றிப் பணிந்துவந்தனர்.

இவ்வாறிருக்க, ஓர்நாள் நான்முகன் மதலையாகிய நாதகீத பாரா யண நாரதமகரிஷியானவர் லோகசஞ்சாரத்தின்பொருட்டு ஸத்திய லோகத்தினின்றும் புறப்பட்டு, தபோலோகாதிகளையெல்லாம் கடந்து, பூலோகத்திற்கு வந்து அநேக ஸ்தலங்களையெல்லாம் சுற்றிக்கொண்டு, கடைசியாக பாலசித்தன் சிவயோகம்புரிந்துவரும் ஆச்சிரமத்தினை யடைந்தாராயினர். மகதியாழினைக்கொண்டு மகேசனைப்பாடும் அம் மாமுனியினைக்கண்ட பாலசித்தனும், தனதாசனத்தினைவிட்டெழுந்து அம்முனிவரனுக்கு அர்க்கியபாத்தியாதிகளளித்து, ஓர் ஆசனத்தினில் இருத்தி வணங்கி, "ஐயனே! எனையாட்கொள்ளவந்த மெய்யனே! இவ் வேழையின்பால் கருணைவைத்து இவ்வளவுதூரம் இக்குடிசைக்குத் தாங்கள் எழுந்தருளியதானது எனது பூர்வபூண்ணிய மாதவப்பேறே யன்றி வேறேயில்லையென என் மனத்திற்கொண்டேன். எனது துன்ப மெல்லாம் இன்றோடே விண்டேன்" எனப்பற்பலவாறு உபசாரமொழி களைக்கூறும் அப்பாலசித்தனை நோக்கி, அருந்தவச்செல்வனாகிய அப் பரமேட்டியின் பாலகன் பகரலாயினான். "அப்பனே பாலசித்தா! ஒப் பிலா ஞானவித்தா! இவ்வாச்சிரமத்தின் மேற்பால் கந்தவேளுக்குகந்த கானமயிலானது ஓர் காரணத்தினால் மலைவடிவமாகி மால்மருகனை நோக்கித் தவம்புரிந்து, அன்னவனருள்பெற்று அற்புதக்காக்ஷியுடன்

விளங்கும் திருமயிலையங்கிரியென்னும் அற்புதமலையானதொன்றுளது. அம்மலையானது ஆறுமுகன் அன்போடும் தங்குவதற்குகந்த யோக்கியதையுடன்கூடி விளங்குகின்றது. நீயும் ஆங்குச்சென்று, ஆறுமுகனை நோக்கி அருந்தவமியற்றுவையேல் அவனது அருள்வலியால் அனைத்தும் சித்திக்கும்" என்று மொழிதலும், இதனைக்கேட்ட பாலசித்தனும் அம்மாமுனியினை நோக்கி, ஐயனே! அருந்தவத்துய்யனே! மயிலானது மலையின் வடிவினைக்கொண்டு தவமியற்றிய காரணம் யாதோ அதனை எந்தனுக்கு ஸவிஸ்தாரமாய் விளங்கும்படி தாங்கள் உரைத்தருளல் வேண்டுமென வேண்ட, நாரதமாமுனிவரனும் நவிலலுற்றுன்.

4. மலையுற்பவமுரைத்த சருக்கம்.

முன்னொருகாலத்தில் மாயையின் புதல்வர்களான சூரபத்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் என்பவர்கள் மகேசனைநோக்கி மாபெருந்தவம்புரிந்து வேண்டிய வரங்களையெல்லாம் பெற்று, ஆயிரத்தெட்டண்டங்களையும், அழியாச் செல்வத்தோடும் ஆண்டுவந்ததோடு, அமரேந்திரனை அடித்து விரட்ட அன்னவனும் அஞ்சி ஸ்ரீ உமாமகேசுவராள் பிரளயகாலத்தில் பெருந்தோணியிலமர்ந்து வந்து வீற்றிருக்கும் சீகாழி எனும் திவ்வியத் திருப்பதியின்கண்ணே வந்து, தனது தேவியாகிய இந்திராணியை, அரிஹரபுத்திரனுரிடம் அடைக்கலம் வைத்து, அப்பதியின்கண்ணே அமரேந்திரனுனவன் ஓர் மூங்கில் வடிவுடன் அருந்தவமியற்றிவந்தனன். இதனைக் கண்ணுற்ற மற்றெனைய தேவர்களெல்லாம் மறைந்தோடிச்சென்று, மால்மகனுன நான்முகனிடம் முறையிட்டலர, நான்முகனும் அத்தேவதாகணங்களுடன் நாரணன்பாற்சென்று நவில, அன்னவரும் அவ்வசுரரை அழிக்க ஆதிபராசத்தியுடன் கூடிய அண்ணலேதான் இதற்கோருபாயம் செய்யல்வேண்டுமெனச் சிந்தித்து, பிரமனை முதலாய சகல தேவதாசமூகங்களுடனும் பாற்கடல்துயிலும் பரமன், கைலையங்கிரிக்குச்சென்று, கௌரீநாதனைக்கண்டு போற்றி, அவ்வரக்கர்களின் கொடுமைகளையெல்லாம் ஆதியோடந்தமாய்க் கூறி அமராவதி பாழ்த்துப்போய் அமரேசனும் கழுமலநகரில் முழுமனதுடன் கடுந்தவமியற்றும் காரணத்தையும் கூறிக் காத்தருளல் வேண்டு

மெனக் கதறினர். இதனைக்கேட்ட முக்கண்ணனும் முருகனைநோக்கி அவ்வரக்கர்களையெல்லாம் அழித்துவாவெனக்கூறி அனேகம் அஸ்திர சஸ்திராதிகளைத்தந்து அனுப்பியருளலும் ஸ்ரீசிவகுமரனும் பராசத்தியின்பால் சென்று ஞானசத்தியினைப்பெற்று வீரபாகு முதலிய நவவீராதிகணங்களுடனும், ஒன்பதுலக்ஷம் சேனைகளுடனும், நான்முகனாதிதேவர்களுடனும் பிரயாணமாகி பரமசிவன் தங்கியிருக்கும் பற்பல திவ்விய திருப்பதிகளையெல்லாம் முறையே தரிசித்துக்கொண்டு, பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம் புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரு திருநாமங்கள் பெற்றும், பார்வதி பரமேசுவராளுற்றும், குருலிங்க சங்கம க்ஷேத்திரமாய், மூர்த்தி, தலம், தீர்த்தங்களாற் சிறந்தும், பிரமேந்திராதி சகல தேவதாகணங்களும் வணங்கித்துதித்துப் பூஜித்து நற்பேறுபெற்ற நற்றலமாயும், ஊழிகாலத்தும் ஒழியாது நிலைநிற்கும் திவ்விய க்ஷேத்திரமாயும் விளங்காநின்ற காழிமாநகரம் வந்து தேவேந்திரனது அனுமதியினால் தேவதச்சனால் நிருமித்துத்தந்த ஓர் ஆலயத்திற்றங்கி, அவ்வாலயத்தின் எதிரில் ஓர் தடாகம் அமைக்கச்செய்து, அதில் கங்கையே முதலாய புண்யதீர்த்தங்களைத் தருவித்து, பிரமபுரீசனுக்கபிஷேகஞ்செய்து, அர்ச்சித்துத் துதித்து வணங்கி ஆனந்தபரவசனாய் நின்றனன். உடனே என் அன்னையாகிய வன்னக்கிளிமொழியாள் திருநிலையழகியின் திவ்வியத் திருநாதனும் தேவியாருடனும் வந்து குமரனை மார்பொடணைத்து, திருநீறு தரித்து, திவ்விய பஞ்சாக்ஷரத்தினை யுபதேசித்து, பாசுபதாஸ்திர முதலிய அஸ்திரங்களை அளித்து, சூரபத்மாதி அவுணரையெலாம் வென்று, அமரர்களின் சிறையைமீட்டு அதிசீக்கிரம் வருவாயென ஆசிகூறியருளினான். பின்னர், குமாரக்கடவுளும் பிரமபுரீசன் அநுக்கிரகம்செய்தவாறே மாயாபுரி, வீரமாமகேந்திரபுரி இவைகளுக்குச் சென்று, தாரகாசுரன், சிங்கமுகாசுரன், முதலிய அரக்கர்களையெல்லாம் அறவேயொழித்து அனந்தரம், சூரபத்மனோடுங் கடுஞ்சமர் புரிந்துவருங்காலையில், வீரமது குன்றிய அச்சூரனும், ஓர் மாமரமாகி நிற்கவும், அதனையும் சத்திவேலினைக்கொண்டு இருகூறுக்க, பின்னர் அவ்வரக்கன் தனது சுவயரூபங்கொண்டு, எதிரில்வந்து நிற்கவும், மறுபடியும் காலனும் கண்டு நடுங்கும் கோலாகல லீலாவிநோத வேலாயுதத்தினை வேண்டி விடுத்தலும், அவ்வரக்கன் மயிலும் சேவலுமாய் நிற்றலும், ஆறுமுகவேலனான எனதையனும் அம்மயிலின்மீது தன திருசரணங்களையும் ஊன்றியமர்ந்ததும் அம்மயி

லானது மாதவனது மருகனைச் சுமந்து பாதல பூதல மேதலமாகிய மூவுலகும், மற்றேனைய அண்டகோடிகளொவ்வொன்றினையும், சுற்றிச் சுற்றி அயர்ந்து சோர்ந்து, தவித்து வாடிடுங்கால், ஆறுமுகன் திருவருளால் ஞானோதயமுண்டாகி, அடியார்க்கெளியனான அவ்வடிவேலனை ஆயிரம் நாமாக்களோடும் அன்புடன் துதித்து அகங்காரமமகாரமெலாம் அடங்கிநின்றது.

அனந்தரம், சத்திவேலாயுதந்தரித்த உத்தம சற்குருநாதனாகிய சித்தசனையெரித்த வித்தகன் புதல்வன், அத்தியைக்காத்த ஆதிகாரணன் மருகன், தத்தைமொழியம்பிகையின் முத்துக்குமார முருகவேள் அம்மயிலினை நோக்கி மிக்கக் கருணையுடனேகூடத் தக்கமொழியொன்றினைக் கூறலாயினான். "விசித்திர விநோதப் புள்ளிகளோடுங் கூடிய கலாபமயிலே! உனது துதிக்கு மிகவும் மெச்சினேன். உனதிச்சை யாதோ அதனையச்சமறச் சொச்சமின்றி இப்போதேகேட்கக்கடவாய்" எனத் திருவாய்மலர்ந்தருளினான். அதனைச் செவியுற்று அம்மயிலானது "ஐயனே! அன்பர்க்குகந்த மெய்யனே! அழகிய செந்தாமரையனைய கையனே! இம்மயிலின் உருவத்துடனேயே எக்காலத்தும் தேவதேவனாகியும், சுவயம்பிரகாச சுந்தர வடிவனாகியும், தவமுனிவர்களும் தரிசிக்கொணாத தத்துவசுவரூபனாகியும் விளங்கும் தங்களது இரு சரணாரவிந்தங்களையும் யான் தாங்கியுலாவிவரும்படிக்கான திவ்ய வரத்தினைத் தந்தருளல்வேண்டும்" எனவேண்டியது. அதனைக்கேட்ட ஐயனும், "அவ்வாறேயாகுக. ஆயினும் அசுராம்சத்தோடு கூடிய இச் சரீரத்துடன் நீ என்னையடைதல் தகாது. ஆதலின் இச்சரீரத்தினை மலைவடிவமாக மாற்றிக்கொண்டு தவஞ்செய்து வருவையாகில், அதன் பின்னர் உந்தனை யான் ஏற்றுக்கொள்வேன்" எனப்புகல, அம்மயிலும் அவ்வாறேமலைவடிவுடனிருந்து மாதவஞ்செய்தற்குகந்த, ஓர் தலத்தினைக் கூறல்வேண்டுமென்றிறைஞ்ச, அண்ணலும் அதனைநோக்கி, "தென்பெண்ணையாற்றின் வடபால் தவஞ்செய்க" வென அத்தலத்தினையுங்காட்டியருளினர். அவ்வாறே, அம்மயிலும், தொண்டைநாட்டில் தென்பெண்ணையாற்றின் வடபால் மலைவடிவுற்றுத் தவஞ்செய்து வருவதாயிற்று. அத்தவத்தைக்கண்டுமகிழ்ந்த ஆறுமுகவேலனும் எனதன்னையர்களாகிய வல்லி தெய்வயானைசமேதனாய்க்காக்ஷியளித்தருளி, அம்மயிலின்மீதாரோகணித்து, "பின்னும் உனக்கு வேண்டும் வரம்யாதோ அதனையுங் கேட்பாயாக" வென்னலும், அம்மயிலானது ஆண்டவனை நோக்கி "ஐயனே! ஸர்வலோகசரண்யனே; ஸச்சிதானந்தப்

பரம்பொருளே!

* கரிமாமகளைமருவுமருட்கடலேநின்றன்கழலிணையைப்,
பரிமாமயிலிற்றுங்கிநிற்கும்பலனைப்பெற்றேன்சலனமற்றே,
னிருபாவினையாட்கொண்டதுவேநியமமாகிலென்னமிசத்,
தொருபாலிங்ஙன்மலையுருவாயுறையவேண்டுங்கற்பமுமே.

* கற்பாகற்பமுடிவின்றிக்கழறுமயிலைமலையென்றே,
நற்பேர்விளங்கக்கீர்த்திபெற்றுநாதானின்றன்மாதருடன்,
பொற்பாயமர்ந்தேயடியர்குழாம்போற்றநாளும்வரநல்கி
நிற்பாயுமைபாலாவென்றுனீலமயிலாய்நிலைநின்றான்.

யான்மலைவடிவாகியிருந்து மாதவஞ்செய்து தமதருள் பெற்று பெரும்பேறடைந்ததானது என்றும் மறவாதிருக்கும்படிக்கு எனது ஓர்கலையானது இங்கு எக்காலத்தும் மலைவடிவமாகவே யிருந்து இதற்கு எனது பெயராகிய மயிலமலையென்றும், இதன்மேல் இப் போதைய திருக்கோலத்துடனே என்றென்றும் அசையாதமர்ந்து அடியார்களின் அருங்குறைகளையெல்லாம் அகற்றி, அன்னவர்களது அவாக்களையெல்லாம் பூர்த்திசெய்து அனுக்கிரகித்தருளிவ ல்வேண்டு மென்னும் வரத்தினையளித்தல்வேண்டுமெனப் பிரார்த்தித்துக்கொண் டது." அதனைக்கேட்ட ஆறுமுகவேலனும் அம்மயிலினை நோக்கிக் கூறலாயினர். "கச்சையணிகாரிகையர் மெச்சும், உச்சிதமானதோர் பச்சைமயிலே! நச்சரவம்பூண்டநக்கனனவன், முன்சங்குகன்னனென் னும் சிவகணத்தலைவனுக்கு ஓர் சாபமீய்ந்து, மறுபடியும் அவன் வேண்ட அன்னவனுக்குரைத்த அருமைத்திருமொழிகளையெல்லாம் உண்மையாக்க அவனுக்காக நாம் இம்மலைக்குவருவோம். அக்கால், இம்மலையின்மீதுதங்கி அடியார்படுந்துயராயின வெல்லாமகற்றி அவர வர் வேண்டுவனவெல்லாம் அளித்து, அனுக்ரகித்துவருவோ" மெனச் சொல்லி சத்திவேலாயுதந்தரித்த முத்துக்குமாரமுருகவேள் அப்பச்சை மயிலின்மீதேறி, தனதிச்சைநாயகிமார்களாகிய, கொச்சைமொழியா ரிருவரும் லச்சையற்றுத்தனையணைத்திருபுறமும்விளங்க, நச்சரவம் பூண்ட நக்கன்வாழ் உச்சிதக்கைலையின் ஓர்புறம் விளங்கும் கச்சிதமான நற்கந்தகிரியினை மச்சரமின்றி மாண்புடனடைந்தான். அதுமுதல் அம் மலைக்குச்சென்று அறுமுகனைத்துதிக்கும் அன்பர்களுக்கு அவ்வறு முகன் ஆனந்தமூட்டி, ஸர்வமங்களங்களும்கூட்டிக் கடையில்முத்தி வீட்டினையும்காட்டி, மோக்ஷானந்தத்தினை யூட்டியருளுகின்றனர். அம்

மயிலானது மலைவடிவாகி மயிலமெனும்பெயருடன் விளங்கும் காரணம் இதுதானெனக்கூறி நாரதமாமுனியும் தனக்கிசைந்த விடத்திற்குச் செல்ல விரும்பியவராய் மகதியாழுடன் கூடி மகேசனைப் பாடியாடி மறைந்துமேவினர்.

---

5. பாலசித்தன் தவம்புரிசருக்கம்.

அனந்தரம், நாரதமாமுனிகூறிய நன்மொழிகளைக்கேட்ட பால சித்தனும் தம்மடியவர் திருக்கூட்டத்துடனும் அம்மயிலையங்கிரிக்குச் சென்று ஆங்கோர்சுனையில் மூழ்கி, சத்திவேலாயுதனைச்சித்தத்திருத்தி பத்திவிநயத்துடனே ஏகாக்கிரசித்தனுகி அசைவற்று மோனமுற்று ஷடாக்ஷரங்கற்று தைலதாரையைப்போன்று தமைதகத்தியானபரனுய் விளங்கிவந்தான். இவ்வாறு, நெடுங்காலம் தவமியற்றியும் எந்தையாகிய கந்தநாதன் தனது சொந்தத்தரிசனம் தந்திலனுனதினுல் முந்தியவினை ஈதோவெனச் சந்திரனைத்தரித்த ஸாம்பசதாசிவபக்தன் பந்தமதறுத் தப் பாலசித்தன் தொந்தமதற்ற மனமதுவருந்தி எனதன்னையராகிய கஜவல்லி வனவல்லியர் இருவரையும் அகத்திலிருத்தி அருந்தவமியற்ற லாயினுன், இதனையறிந்த அருட்சக்திகளிருவரும் ஆறுமுகவேலனின் அடிக்கமலங்களிற்பணிந்துபோற்றி பாலசித்தனின் தவவலிமையினைக் கூறி அவனுக்குச்சீக்கிரமே காக்ஷியளித்து அனுக்கிரகித்து அருளல் வேண்டுமெனப் பிரார்த்திக்க, அதனைக்கேட்ட அம்மை மீனுக்ஷியின் அருந்தவச்செல்வன் அடியார்க்கருள்துய்யன் ஆறுமுகவேலனுன என தையன் சொல்வதாயினுன். "கேளீர் என்கண்மணிகளே! அப்பாலசித் தன் என்போன் முன் இக்கைலையங்கிரியின்கண்ணேயுள்ள சிவகணங் களுள் சங்குகன்னன் என்னும் பெயரினையுடையோன். எந்தையாகிய சந்திரசேகரனுக்கு மிக்க உரியோன். சொந்தமாகிய சிவகணங்களுக்கெ லாம் தக்கபெரியோன். மங்களம் தங்கிய கங்கையைத்தரித்த சங்கர னின் சாபவசத்தினுல் பூவுலகின்கண்ணே மானிடனுய் வந்துள்ளான். ஆதலின் நாம் அவனுக்கு அநுக்கிரஹம் செய்யவியலாதெனக்கூற, அவ் வன்னையரிருவரும் தமது நாதனது வார்த்தைகளை மறுத்து, அவன் எத்தகைய சாபம் ஏற்றிருந்திடினும், நம்மை அன்புடன் பத்திசெய்து

போற்றித் தவம்புரிந்து வருகின்றுனுதலினுல் அவசியம் அவனுக்கு அநுக்கிரகம் செய்தேயாகவேண்டுமெனப் பிரார்த்தித்தும், ஈசனது புத்திரன் இசைந்தானில்லை. பின்னும், வள்ளிநாயகியார் பன்முறையும் வேண்டிநிற்க, எனதையன் முனிவுமேற்கொண்டு, சங்கரசுவயம்புவின் மனம் வருந்தச்செய்து அவனது சாபத்தினையேற்றவன்மேல் அருள் சுரக்க மனம்வைத்தமையால் இனி நீ எனதருகில் நிற்றல் தகாது. உடனே செல்லுகவென மொழிதலும், கள்ளமாலுந்திருமாதும், புள்ளி மானுருவுடன் பெற்ற வள்ளிநாயகியாரும், வெள்ளேறு ஊர்தியும் விமலையும் பெற்ற புள்ளிமயிலேறும் புனிதனைவிட்டகன்று, தேவசேனை யுடன்கூடி, தேவரும் ஏத்தும் பாலசித்தன் தவமியற்றும் பல்வளங்க ளும் சிறந்து விளங்கும் மயிலையங்கிரியினையடைந்து, அச்சித்தனது தவத்திறத்தினைக்கண்டு மிக்க மகிழ்ந்து அவ்வன்னையரிருவரும் தமது தெய்வத்தன்மைவாய்ந்த சோதியுருவத்தினை மறைத்து உத்தம தவத் தில் மெத்தச்சிறந்துள சித்தக்கன்னிகைகளின் திருக்கோலங்கொண்டு விளங்கினர். அவர்களைக்கண்ட அப்பாலசித்தனும் அவர்களை வணங்கித் துதித்து, "நீவிர் யாவர்? எங்கிருந்து வருகின்றீர்?" என வினுவலும், அவர்களும் "அப்பனே! நாங்கள் சித்தகன்னிகைகள். கைலையங்கிரிச் சாரலிலிருந்து வருகின்றோம். இம்மலையினது வளப்பத்தினைக்கண்டு, இங்குதானே தங்கியிருக்க இச்சித்தோம். எங்களைப் பெற்றெடுத்த தாய்தந்தையரைப்போல இன்றுமுதல் நீ காத்துவரக்கடவாய்" எனக் கூறலும், அவ்வாறே பாலசித்தனும் அந்நாள்முதல் திவ்யமான கந்தமூல பலாதிகளைக்கொணர்ந்தளிக்க அம்மையரும் அவைகளையருந்திக்களித்து வந்தனர். அனந்தரம், அச்சித்தகன்னிகைகள் தேவதச்சனை வர வழைத்து, நமக்கோர் திருமாளிகையினை நன்கு அமைத்திடுவாயென, அவனும் அவ்வாறே திவ்யாலங்காரத் திருமாளிகை யொன்றினைச் சிருஷ்டித்துத்தர நன்முகூர்த்தத்தில் நலம்பெற அத்திருமாளிகையிற் பிரவேசித்துப் பாலசித்தனை நோக்கி, "அன்பனே! தேவர் மூவர் யாவ ரேயாயினும் இம்மாளிகையினுட் புகவிடாது அதிஜாகரூகனுய்க் காத்தி ருக்கக்கடவா"யெனக்கட்டளையிட்டனர். அதனைச் செவியுற்ற அப்பால சித்தனும் அவ்வுத்தரவினைச் சிரசாவகித்து அத்திருமாளிகையின் திருவாயிலையடைந்து, யாவர்வரினும் உட்புகாவண்ணம் அதிஜாக்கிரதை யாகக் காவற்புரிந்துவந்தனன்.

---

6. தேடிவருந்து சருக்கம்.

இஃதிவ்வாறிருக்க, அங்கு கந்தகிரியில் விளங்குபவனும், ஞானிகள் உள்ளத்தில் நடிப்பவனும், அடியார்களின் பந்தபாசத்தினைத் தவிர்ப்ப வனும், பக்குவிகள் காண விளங்குபவனும், சித்தர்களுக்கு அஷ்டமா சித்தியருள்பவனும், நித்தியனும், ஒப்பாருமிக்காருமின்றிய ஓங்கார வடிவினனும், திசைமுகன் கலங்கும்படி சிரசினிற்குட்டிய திவ்விய தேஜோமயனுமாகிய தேவர்சேனுபதி, மூவர்க்கதிபதி, பக்தர்க்கருநிதி, பாமரர்க்கோர்கதி, பசுபதியுந்துதி பரமசற்குருபோதன், சிவஷண்முக நாதன், தனது தேவியர்களான வள்ளி தெய்வயானைகளைப்பிரிந்த விரக தாபத்தினைச்சகிக்கவியலாது, எல்லாமுணர்ந்த ஏகநாயகனுகிய பரப்ரம் மம் தானேயாயினும், திருவிளையாடலை முன்னிட்டு, எம்மன்னையரை வைகுண்டம், ஸத்யலோகம், மீதலம், பாதலம் முதலியஎவ்வுலகுந்தேடிக் காணுதவராய், பூதலத்தினில் காசிமுதலிய பல புண்ணிய ஸ்தலங்களி லும், அனேகம் புண்ணிய நதிதீரங்களிலும், மலைச்சாரல்களிலும், முனிவர்குழாம் தவஞ்செய்யும் முக்கியஸ்தலங்களிலும், சோலைகளிலும், அலைந்து திரிந்து கடைசியாக எழில்மிகும்காக்ஷிகள் நிறைந்த எம்பெரு மானுக்குகந்த திருமயிலையங்கிரியினை வந்தடைந்து, அம்மலையின் வனப் பினைக்கண்டு மிக்க மகிழ்ச்சியுற்று, அதனைச் சுற்றிப்பார்த்துவருகையில் அதியுன்னதமான ஓர் சிங்கார மாளிகையினைக்கண்டு, அத்திருமாளிகை யின்கண் ஓர்கால் தனது தேவியார்கள் இருக்கலாமோவெனவெண்ணி, ஓர் இராஜகுமாரனைப்போன்ற வடிவுடன் அத்திருமாளிகையினுட் செல்ல உன்னி அதனையடைந்து, ஆங்கு காவலிலிருக்கும் பாலசித்தன் தடுத்தும் கேளாது உட்செல்ல யத்தனிப்பதையறிந்த அச்சித்தனும், ஓடோடியும் உட்சென்று தேவிமாரிடம் கூறவும், அதனைக்கேட்ட அத் தேவிமாரிருவரும் "அவ்வரசவிளங்குமரனை இத்திருமாளிகையின் உட் புறத்தே புகவிடவேண்டாம், ஓர்கால் உனதுசொல்லினைமீறிக் காவலைக் கடந்து வரமுயல்வனேயாகில், தடுத்துப் போரினைப்புரிக" வெனக்கூறி அதற்காகவேண்டிய அஸ்திரசஸ்திராதிகளையும் அருமைத் தேர் ஒன்றி னையும் அளித்து ஆசீர்வதித்து அனுப்பினுர்கள்.

7. யுத்தச்சருக்கம்.

அவ்வாறு, அன்னையர்களால் அஸ்திரசஸ்திரங்களையெல்லாமளிக்கப் பெற்று, இரதத்தினோடும் வெளிவந்த பாலசித்தனைக்கண்ட கற்றைவார் சடையன்பெற்ற புத்திரனும் சிற்றிடை வள்ளியின் முற்றாமுலைத்தோ யும், வற்றாக்கருணைவாருதியும், கொற்றவனுருவங்கொண்டு, வெற்றி வேல்தரித்து விளங்கும் நற்றவச்செல்வர் நாடும் நம் குருநாதசிகாமணி யாகிய சிவசுப்பிரமணியக்கடவுளானவர், தானும் ஓர் திவ்யத் தேரினை யுண்டாக்கிக்கொண்டு, அதன்மேல் ஆரோகணித்தவராய் அச்சித்த னோடும் நெடுநேரம்வரையிற் சமர்புரிந்து, அனேக திவ்வியாஸ்திரங்களி னால் அவனது அங்கங்களையெல்லாம் பங்கம்செய்ய, அச்சித்தர்பிரானும் மெய்சோர்ந்து, கைசோர்ந்து, நாவுலர்ந்து, கால்களும்தளர்ந்து, கண்களு மிருண்டு, பண்டு யான்செய்த தீவினையோவென வெருண்டு, பாசபந்தங் களனைத்தினையும் விண்டு, பாவையரிருவரையுங்கண்டு, பற்பலவாறாய் முறையிட்டுத் துதிக்க, கருணைபூத்த அக்கன்னியரிருவரும் அச்சித்த னுக்குற்ற அஸ்திரசஸ்திர பாதைகளையெல்லாம் போக்கி, சோகமோக தாபாதிகளையும் நீக்கி, சோர்விலா பலத்தினையுண்டாக்கி, சூரபத்மாதி அசுரர்களின் யுத்தத்தினிற்கூட சோர்வினையடையாத சுந்தர முருகனை யுங்கூடச் சிறிதுநேரம் சோர்வினையடைந்து மூர்ச்சையுறும்படிச் செய் தனர். சோகம்தெளிந்த நச்சரவம்பூண்ட நக்கனின் புதல்வன் மிக்க கோபங்கொண்ட உள்ளத்தினனாய் பச்சைமாலச்சுதனின் தங்கையான கொச்சைமொழியம்பிகையின்பால் பெற்ற சத்திவேலாயுதத்தினை எடுத்து, சித்தத்தினிற்றுதித்து நற்றவச்செல்வச் சித்தநாதனின்மேல் பிரயோகித்தமாத்திரத்தினில், அக்கூர்மைபொருந்திய வெற்றிவேலா யுதமானது எத்திசையினரும் கண்டு கலங்கிஓட, எமனும் இந்திரனும் ஏங்கிவாட, அஷ்டகஜங்களும் அலறிட, துஷ்டநிசாசரர்களும் பதறிட, பூதகணங்களும் கதறிட, பூதலத்தவரும் சிதறிட, மீதலத்தவரும் பெதறிட, பிரளயகாலாக்கினியைப்போன்ற அனற்பொறிகளைச்சிந்தி, அதிவேகமாய்த் தன்னைநோக்கிவரும் முத்துக்குமாரனின் சத்திவேலா யுதத்தினைக்கண்ட பாலசித்தனும், பயந்து நடுநடுங்கி அன்னையரைத் துதித்து நின்றதும், அச்சித்தபுருஷனின் உள்ளத்தினில் ஓர் உணர்ச் சியும், தெய்வீகசக்தியும் உதித்தன. உடனே, உள்ளந்தெளிந்து உற்சாக மிகுந்து மிக்க பலத்துடன் அவ்வுக்கிர வேலாயுதத்தைத் தனதிரு கரங்களினாலும் பற்றித் தனது அன்னைமார்களிடம் சமர்ப்பித்தனன்.

அவ்வன்னையரும் அவ்வேலினைத் தமது செந்தாமரையனைய திருக்கரங்களினால் பற்றி விளங்கினர். இதனைக் கண்ணுற்ற எம்பிரானான கந்தவேளும் கடுஞ்சீற்றத்தினையடைந்தோனாய், தனது கணங்களையெல்லாம் சித்தன்மேல் ஏவ, அப்பாலசித்தனும் தனது சக்தியினால் அனந்தங்கோடிகணங்களையுண்டாக்கி ஏவி, அச்குமரவேளின் கணங்களையெல்லாம் அடித்துப் புறமுதுகிட்டோடச்செய்தனன். அக்கால் முருகர்பிரானும், தென்பாண்டிநாட்டினையாண்டு சோமசுந்தரக்கடவுளரை மணந்த எனதம்மை மீனாக்ஷியை, எவ்வுயிருந் தானாய் எல்லாமாய் எங்கும் நிறைந்துலவும் ஏகநாயகியை, அனைத்துலகும் காக்கும் அகிலாண்டவல்லியை, ஆதிபராசத்தியை, ஆனந்தரூபிணியை, சிற்சொரூபியை, சிவகாமவல்லியை, காமனையெறித்தோன் இடப்பாகம்பெற்ற காமாக்ஷியை, அந்தணர்ச்சிறுவன் அழுதுநிற்கவும், கந்தங்கமழும் கனதனஞ்சுரந்து, திவ்யபாலினை ஈந்தமேதோர் திருபுரசுந்தரியை, விண்ணவரும் மண்ணவரும் கொண்டாடும் விசாலாக்ஷியம்மையைத் தனது உள்ளத்தினில் நினைத்து வருந்தவும், அண்ணமலையானிடப்பாகத்தினைப்பெற்ற உண்ணுமுலையாளும் தனதருமைத் திருமைந்தனின்முன் வந்து, அவனை வாரியெடுத்தணைத்து முத்தமிட்டு, "என் அப்பனே! குழந்தாய்! ஒப்பிலா சுப்பிரமணியே! ஓங்கும்சுடர்மணியே! என்னிரு கண்மணியே! இப்பாலசித்தனென்பவன், நம் கைலைவாழ் சிவகணங்களில் ஒருவனான சங்குகன்னனென்பதனையும், மகேசன் மாபெருஞ்சாபத்தினைப்பெற்று, அச்சாபவிமோசனத்தினை எதிர்பார்த்தவண்ணமாய் இங்குக்காத்துக்கொண்டிருக்கின்றானென்பதனையும் நீ முற்றிலும் மறந்துவிட்டனைபோலும். மேலும் இவனுக்குற்ற பலமெல்லாம் உனதருமைத் தேவியர்களாகிய கஜவல்லி, வனவல்லிகளின் அருள்வலியேயாகும். இன்னும் சிறிது நேரத்தினிலுனது தேவியரைக்கண்டு உளம்மகிழ்வடைவா" யெனக்கூறி மிக்க நேசத்தோடும் வாசமிகுந்த பொற்கமல மலர்மாலையொன்றினை ஈந்து பாசபந்தங்களையறுத்திடும் பராசக்தியாகிய எனதன்னையும் பாங்குடன் மறைந்தாராயினர்.

அனந்தரம், பச்சைமயிலேறிய பாலசுப்பிரமணியக்கடவுளும் அப்பாலசித்தனோடு வில்யுத்தமும் மல்யுத்தமும் புரிந்து அவனைச் சோர்வுறச்செய்தனன்.

8. அருள்புரிந்த சருக்கம்.

அனந்தரம், அச்சித்தர்பிரானும் காங்கேயனது அங்கசங்கமத்தினால் அகம்பாவமற்று, அருள்ஞானமுற்று, அன்பினைப்பெற்று, ஆஹா என்செய்தேன்! பன்னிருகையனாகிய எனதையன், பக்தர்கட்குகந்த மெய்யன், பரமசிவனுக்குபதேசித்த துய்யன், ஸ்ரீ சிவஷண்முககுருபரனோடன்றோ இதுகாறும் சமர்புரிந்தேன். யாரோ மானிடனென்றே நினைத்து அகந்தைகொண்டு, அய்யனை மறந்தேன். அரும்வினைக்கீடாகி நொந்தேன். ஆ! கெட்டேன். என்னே எனது மடமை" என மிக்க வருந்தி, உடனே அடியற்ற மரம்போல் படிமிசை வீழ்ந்து, பற்பலவாறுகத் துதித்துப்போற்றி, "எனதையனே! எனது அறியாமையினை நீக்கி, ஈசனின் சாபத்தினைப் போக்கி, எழில் ஞானத்தினைத்தேக்கி, எனையாளுமையாவென வேண்டி, இருகரங்களையும் சென்னிமேற் கூப்பி இறைவனை இறைஞ்சுவானாயினன்.

* நதிசூடியசடிலன்றருநாதாமலர்ப்பாதா,
முதியோருளமகலாதொளிர்முழுமாமணியொளியே,
விதியின்றிறமறியாதுழல்வினையேனொருபொருளோ,
கதிர்வேலவவெனையாளுதிகருணாகரசரணம்.

* மகமாயையைநிலையென்றுனிவருந்தும்மிகுசிறியேன்,
புகலென்பதுநின்றாளேனும்போதம்பிறவாம,
விகல்கொண்டினைஎதிர்நின்றமரியற்றும்பிழையுடையேன்,
மிகநீங்குதற்கருள்செய்குகவேலாயுதசரணம்.

* சுத்தன்சிவமுத்தன்றவசொருபன்கனலுருவ,
னத்தன்மறைமுடிமேவியவையானனனருளுஞ்,
சத்தேமுழுமுத்தேயருடாயேயிளஞ்சேயே,
நத்தாதுனைநலிசெய்ததைநாடாதருள்சரணம்.

* இசையேபயிலளியின்றிரளிவருங்கடம்பணியுந்,
திசைதாவியபுயனேவள்ளிதெய்வானைமணாளா,
வசையேநினைகுவதன்றினின்மருமாமலரடியை,
யசையாமனதொடுபோற்றிலனத்தாவருள்சரணம்.

* ஒளியேபரவெளியேசகத்துருவேமலர்மருவே,
எளியேனினியுய்யுந்திறமேதும்மறிகில்லேன்,
றுளியேபயின்மதுவார்பொழிற்சுலவுங்கிரியாவுக்,
தளியாயுறைதருவேலவதயவாயருள்சரணம்.

* மயிலேறியமணியேயொளிர்மதியேறியமகிழ்வே,
யயிலேறியகரனேதிருவருளேறியபரனே,
வெயிலேறியகதிர்மேனியவிரிதெண்டிரையரவிற்,
றுயிலேறினன்மருகாசரண்சுகமேயருளென்று.

இவ்வாறு பற்பலவாறுகத் துதித்து, ஈராறு புயத்தனின் இருபதமலர்களிலும், வஞ்சனையின்றித் தஞ்சமெனவீழ்ந்து வேண்டினன்.

உடனே பக்தவத்சலனுகிய பார்வதியின் மைந்தன், பரமசந்தோஷத்தினையடைந்து மனமுவந்து, "அன்பனே! நீ விடுத்த அஸ்திரசஸ்திரங்களையெல்லாம் மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய மணங்கமழும் மலர்களென மதித்தேன். நீ இனி அஞ்சேல். மகேசனின் சாபத்தினையும் நீக்கினேம். உத்தமமான நற்சிவ ஞானத்தினையும் நல்கினேம். வேதநெறியும் சைவாகமங்களும் தழைத்தோங்கிவளர நீ வந்திருக்கின்றனையாதலால், அவ்வாறே செய்து, என்றும் பக்தகோடிகளுக்கனுக்கிரகித்துக்கொண்டு, இம்மயிலையங்கிரியின்கண்ணே தங்கியிருக்கக்கடவாய்" என அநுக்கிரகம்செய்தருளினன்.

---

9. திருமணச்சருக்கம்.

அனந்தரம், அப்பாலசித்தனும் அறுமுகவேலனும் அம்மாளிகையின் உட்புறம் செல்லலாயினர். இவ்வனைத்தினையும் தெரிந்துகொண்ட தேவியரிருவரும் சித்தகன்னிகைகளின் உருவங்களை மறைத்து, முன்போன்ற சர்வாலங்காரபூஷிதைகளாக விளங்கினர்கள். முருகப்பிரானும் அரசிளங்குமரனைப்போன்ற உருவத்தினை மறைத்து, தனது நிஜரூபமாகிய திவ்விய தேஜோத்மயத் திருக்குமரனின் திருவுருவத்தோடும், அழகிய புள்ளிமயிலின்மீதேறி ஆனந்தமாய் விளங்கினன். உடனே

ஹரிஹரபிரமேந்திராதி ஸமஸ்த தேவதாசமூகங்களும் மாதவச்சிரேஷ்டர்களாகிய மகரிஷிக்கூட்டங்களும், அம்மயூரகிரிக்கு வந்துசேர்ந்தனர். நான்முகனது ஏவலினுல் தெய்வதச்சனுன மயனும், ஆங்கோர் அழகிய நகரத்தினேயும், பசும்பொன்னும், பச்சை, மரகதம், நீலம் முதலிய பற்பல நவமணிகளினுலும் சமைத்த ஓர் கல்யாண மண்டபமும், அதில் ஓர் மணவறையையும், பார்ப்பவர்களின் மனம் பரவசமடையச்செய்து முடித்தனன்.

அதன்பின்னர், ஸ்ரீ முத்துக்குமார முதல்வனுக்கும், கஜவல்லி, வனவல்லிகளாகிய எனதன்னேயரிருவருக்கும், கங்கை, யமுனே, சரஸ்வதி, நர்மதா கோதாவரி, கிருஷ்ணு. காவேரி முதலிய புண்ணிய தீர்த்தங்களினுல், மங்களஸ்நானம் செய்துவைக்கப்பெற்றும், திவ்யாபரணங்களேயும், திவ்ய பீதாம்பரங்களேயும் அணியப்பெற்றும், பரிமளமிகுந்த நறுமலர்மாலேகளேச்சூடியும், பனிநீருடன் பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ கோரோஜனே, கஸ்தூரி, புனுகு முதலியவைகள் கலந்த வாசமிகும் நேசச்சந்தனம் நிறையவணிவித்தும், ஜவ்வாது திலகத்தினேச் சரிவரத்தீட்டியும், திவ்யாலங்காரதேஜோமய ஜகன்மோஹனுகார மூர்த்திகளாக விளங்கும் அய்யனேயும், அன்னேயரையும், நவரத்னகசிதமான நற்சிம்மாசனத்தில் அமரச்செய்து, பார்வதிபரமேசுவரர்களும், லக்ஷ்மிநாராயணர்களும், வாணீ ஹிரண்யகர்ப்பர்களும், சசிபுரந்தரர்களும் பார்த்துப் பரவசமடைய, பாலசித்தனுல் ஸ்ரீ கஜவல்லி வனவல்லிகளாகிய எனது தாய்மார்களிருவரையும் தாரைவார்த்துத்தர, அத்தேவிமாரிருவரையும் பாணிக்கிரஹணஞ்செய்து அக்கினிவலம்வந்து ;

* பூசுரர்மறைநீடப்புலவர்கள்புகழ்பாட
வாசகன்முனிவரெலாமாசிசொலிக்கூடப்
பாசிழையாரமரர்பாவையர்மலர்போடக்
காசணிமுலேயமரக்கணிகையர்நடமாட.

* வாரணிமணிமுரசம்வல்லிசைகுடமுழவ
கேரிறடாரியொடுஞ்சல்லரிநீள்பம்பை
சீரிசைவீணவீரசின்னங்குழல்கஞ்ச
மார்கலியெனவைம்பாற்கருவிகளார்த்தனவே.

* மங்கலசூத்திரமம்மணிவணனணிமருகன்
செங்கையினேந்திமணத்தெரிவையரிருவர்களம்
பொங்குறுமழகெய்தப்பொற்பின்மகிழ்ந்தணியச்
சங்கரனுமையுவகைச்சாகரமூழ்கினரால்.

ஸகல முனிகணங்களும், ஸகலரிஷிகணங்களும், ஸகலதேவதாகணங்களும், ஸகல பக்தகோடிகளும் ஜயவிஜயீபவாவெனவாழ்த்தவும், தும்புரு நாரதாதியர் பாடவும், அரம்பையராதியர் ஆடவும், பேரீதுந்துபி முதலிய வாத்தியகோஷங்களெல்லாம் எட்டுத்திக்குகளிலும் செவிடுபட ஒலிக்கவும், தெய்வமங்கையர்களெல்லாம், பாரிஜாதம், மந்தாரம், ஹரிசந்தனம் முதலிய தெய்வலோகத்து மணங்கமழும் மலர்களையெல்லாம் வாரிவாரி இருகைகளினாலும் மாரிபோல் விண்ணினின்றும் சாரிசாரியாய் ஓயாமற் சொரியவும், ஸ்ரீ பாலசுப்பிரமணியக்கடவுளும், அவ்விருதேவியர்களது அழகிய கழுத்துகளில், திவ்யமாகிய லக்ஷ்மீகரம்பொருந்திய மங்கல சூத்திரங்களைத் தரித்தருளினான்.

அதனைக்கண்ட திங்களணிசெஞ்சடையானான மங்கைபாகனும், சங்கணிகரத்தனான செங்கமலநாதனும், பங்கஜாஸனனாகிய பாரதீரமணனும், நங்கை இந்திராணியின் நாதனான ஆயிரங்கண்ணனும், ஆங்குளமற்றேனைய விண்ணவர் மண்ணவர்களும் அகமகிழ்ந்து ஆனந்தஸாகரத்தில் மூழ்கினாராயினர். அனந்தரம் ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுளும், ஸ்ரீ வல்லீதேவஸேனாஸமேதனாய், பச்சைமயிலின்மேரில் உச்சிதமாய் அமர்ந்து, சேவலின் கொடியும் சத்திவேலும் தாங்கி, ஸர்வமங்களங்களும் பொருந்திய ஸௌந்தரவிக்கிரகனாய், மந்தஹாஸ முகாரவிந்தத்தோடும், கருணைபொழியும் கஞ்சமலர்க்கண்ணனாய், கல்யாண திருக்கோலத்தோடுங் கூடியதானக் காக்ஷியினையளித்து, ஸகல பக்தகோடிகளையும் அநுக்கிரகித்தருளினான்.

அதன்பின்னர், பக்தவச்சலனாகிய பான்மதிசூடிய பரமேசுவரனும் பாலசித்தனை நோக்கி, "முன்னர் யாம் உனக்களித்த சாபமானது நீங்கிவிட்டமையினால், இனி நீ இவ்வுலகுளோர்க்கு விபூதிருத்திராக்க பஞ்சாக்ஷரமகிமைகளைப்புகட்டி, சித்தசுத்தியைநாட்டி, சிவஞானத்தினையூட்டி, சிதாபாசத்தினையோட்டி, பாசபந்தத்தினைத்தீட்டி, பரமானந்தமோக்ஷத்தினிற்கூட்டி, பரமேட்டியாகிய பாவகிசுதனுடன்கூடி, பாரினில் ஐந்நூறாண்டளவுகாலம் வசித்து, அதன்பின்னர் நம்முடன் ஐக்கியமாகக்கடவாய்" எனக்கூறி, ஆனந்தவல்லியாகிய உமையவளுடன்கூடி ரிஷபவாகனாரூடராய் கைலையங்கிரிக்கு எழுந்தருளினான். மற்றேனைய பிரமருத்திரேந்திராதி ஸமஸ்ததேவதாகணங்களும், தத்தம்தேவியர்களுடன் கூடியவர்களாய்த் தங்கடங்கள் யதாஸ்தானங்களை யடைந்தாராயினர்.

சகலாண்டகோடிகளையும் தன் குக்ஷியின்கண்வைத்தன்னையைப்போலாதரித்துவரும் எனதையனாகிய ஸ்ரீஆதிநாராயணனும், ஸ்ரீதேவி பூதேவி ஸமேதனாய், கருடாரூடனாய், தமதருமைத் திருமருகனான முருகனை வாழ்த்தி விடைபெற்று, தனதுறைவிடத்திற்கெழுந்தருளினான். ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுளரும், முன் மயிலுக்கு வரமளித்தவாறே, தனதிருதேவியர்களுடனும், சேவற்கொடியுடனும், சத்திவேலுடனும், நித்தியமும் காக்ஷியளித்துக்கொண்டு, ஸகல பக்தகோடிகளையும் ஸதா அநுக்கிரகித்துக்கொண்டு, அம்மயிலையங்கிரியிலேயே அமர்ந்தருளியுள்ளான். பாலசித்தனும், சந்திரசூடனாகிய சடைமுடியண்ணல் ஸ்ரீ பரமேசுவரனின் கட்டளையின்படியே இவ்வுலகுளோர்க்கு சைவாகமாதிகளையெல்லாம் செவ்வனே போதித்து, சிவஞானமெனும் சிறந்த அமுதினையூட்டி, சிவானந்தசாகரத்தினில் முழுக்காட்டி, சிவசாயுஜ்யமாகிய மோக்ஷத்தினிற் கூட்டி, ஐம்முகவனது ஆணையின்படி, ஐந்நூறு ஆண்டுகளானதும், தனக்குப்பிறகு இப்பூதலத்தில் சிவஞானமானது சிறந்து செழித்தோங்க, அப்பாலமடத்தில் அறிவினிற்சிறந்த அரிய சீஷன் ஒருவனுக்கு, சிவதீக்ஷையையும், சிவலிங்கதாரணத்தினையும் செய்துவைத்து, காஷாயவஸ்திரமும், விபூதிருத்திராக்கமுமணிவித்து, வாழையடிவாழையாய் சிஷ்யப்ரசிஷ்யவர்க்கங்களுடன் கூடி, இம்மடமானது முருகனது திருவருளால் எந்நாளும் ஓர்குறைவுமின்றி நிறைவுற்று நித்திய மங்களத்துடன் நிலைபெற்றிருக்கக்கடவதென ஆசிகூறி, ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுளின் கற்பக்கிரகத்துத் தென்பால், ஓர் சிவலிங்கவடிவமாகி, பக்தகோடிகளுக்கெல்லாம் அவரவர் விரும்பும் படிக்கான இஷ்டசித்திகளனைத்தையும் தளர்விலாதளித்துத் தனிப்பெருஞ்சோதியாய் விளங்கிவருகின்றான் எனச் சூதபுராணிகரும் சொல்லியருளினார்.

---

10. தீர்த்தமகிமைச்சருக்கம்.

இவ்வாறாகச் சூதபுராணிகர் கூறிவந்த முருகனது திவ்ய லீலைகளையும், மயிலையங்கிரியின் மான்மியத்தினையும் செவியாரக் கேட்டு ஆனந்தித்த சௌனகாதி மகரிஷிகளெல்லாம் ஆனந்தக்கூத்தாடி, ஜயனைப் பாடி அகமகிழ்ந்து, கண்ணீர் ஆறாய்ப்பெருக, ஆனந்தபாஷ்பத்துடன்

முடிமிசைக் கரங்கள்கூப்பி, முருகனைத்துதித்துப்போற்றி வாழ்த்தினார்கள். பின்னும், அச்சௌனகாதிமகரிஷிகளெல்லாம் சூதபுராணிகரைப் பார்த்து, ஐயனே! சிவஞானத்துய்யனே! சிவஷண்முகநாதனுக்குகந்த மெய்யனே! தாங்கள் இதுகாறும் கூறிவந்த முருகனது திவ்விய சரித்திரங்களையும், மயிலாசல மான்மியத்தினையும் கேட்டு ஆனந்தித்தவர்களாயினோம். பின்னும், அம்மயிலையங்கிரியினைச் சூழ்ந்துள்ள தீர்த்த விசேஷங்களையும் அறிய விருப்புற்றோமானதினால் அதனையும்கூறியருளல்வேண்டுமென வேண்ட, சூதபுராணிகரும் சொல்லலாயினார்.

கேளீர், சௌனகாதிமகரிஷிகளே! அம்மயிலையங்கிரியினது ஆக்னேயமூலையில் பாலசித்ததீர்த்தமென்றோர் தீர்த்தமுளது. அஃது சிவதீர்த்தம், சிவஞான முத்திதீர்த்தம், மோனதீர்த்தம், பத்திதீர்த்தம், இஷ்டசித்திதீர்த்தம் என்னும் பலநாமங்களையுடையது. அதில் ஸ்நானம் செய்து முருகனை வணங்கி, அம்மயிலையங்கிரியினை வலம்வந்து அவனது தீர்த்தமும், திருநீறும் உட்கொண்டால் சகல வியாதிகளும் நீங்கி, சத்புத்திர பௌத்திராதி வர்க்கங்களுடனும், தனகனக வஸ்து வாகனாதி சமஸ்தமான ஐசுவர்யங்களையும், அணிமாதி அஷ்டசித்திகளையும், நாமகள் பூமகள் கடாக்ஷத்தினையும், தீர்க்காயுளையும், திடகாத்திரத்தினையும் பெறுவர். நவக்கோள்களாலாய பீடைகளும் நீங்கி நன்மையினை அடைவார்கள். மேலும் அக்கிரியின் அஷ்டதிக்குகளிலும், அஷ்டதிக்குபாலகர்களின் பெயரினைக்கொண்ட எட்டுதீர்த்தங்கள் உள்ளன. அவைகளில் பக்தியோடும் மூழ்கி முருகனைத் துதிக்கில், அஷ்டதிக்பாலகர்களின் அருளால் அனைத்துமேயுண்டாகும். அக்கிரியினது கீழ்ச்சாரலில், வள்ளிதெய்வயானைதீர்த்தமென்றொன்றுள்ளது. அத்தீர்த்தத்தினில் மூழ்கி, அம்மையரைத் தரிசிக்க, அனைத்துஞ் சித்தியாகும். அக்கிரியின் மேற்புறம், குமரானந்ததீர்த்தம் என்பதொன்றிருக்கிறது. அதனது மகிமை யாதெனில், அதனது தர்சனஸ்பர்சன ஸ்நானபானங்களினால், சகல வினைகளுந்தீர்ந்து, பிறவியென்பதற்று, பேரின்பநிலையுற்று, ஸர்வமங்களங்களும் பெற்று, சாசுவதமான நித்திய நிரதிசயானந்த நிர்மலச் சுகவாழ்வினையடைந்து, உய்வார்களெனில், அதன் சிறப்பினைக்கூற, யாரேவல்லவராவார்? எவ்வுலகினரும் தொழுந்தலங்களுக்குள், மயிலையங்கிரியெனுந்தலமே மேன்மையுற்றதாகும். எவ்வுலகினரும்தொழும் தீர்த்தங்களுக்குள், சித்ததீர்த்தமே சாலச் சிறந்ததாகும். எவ்வுலகுளோரும் தொழும் மூர்த்திகளில் மயிலையங்கிரி முருகனே இறைவனாகும். எவ்வுலகமும் தொழும் அடியார்களில், மயிலையங்கிரி

மலையினைத்தொழும் அடியார்களே தக்கச்சிறந்தோராவார். அத்தலத்தின்கண்ணே அமர்ந்துள முருகனின் ஆலயத்திருப்பணியொன்றியற்றுவோர்கள், எத்திசையும் புகழ்ந்தின்புற இவ்வுலகினில் வாழ்ந்து, பின்னர் அரம்பையர் ஆலவட்டஞ் சாமரையிரட்ட சொல்லொணுச் சித்திரங்களமைந்த நவரத்னகசித நற்சிங்காசனத்தமர்ந்து, பொன்னுலகினில் அரசாக்ஷிபுரிவார்கள். திருமயிலைமலைக் குமரனுக்கு அன்புடனே, பிரகாசத்தினைத்தரும் திருவிளக்கொன்றினை யிடுவோர், வானுலகதனில் அரம்பையர்களெல்லாம் ஆயிரந்தீபங்களைக்கரத்திலேந்த வாழ்வார்கள். வண்டுமொய்க்கும் வாசனைபொருந்திய மலர்மாலைகளை வடிவேலனுக்கணிவிப்போர்கள், வானுலகிற் கற்பகநிழலின்கண்ணமர்ந்து ஆனந்தமுறுவர். அத்திவ்வியத் திருப்பதியின்கண்ணே நந்தவனவாபீகூபதடாகாதிகளையியற்றினோர்கள் பிறப்பிறப்பற்று, அந்திவண்ணனமர் அழகிய கைலையங்கிரியினையடைவார்கள். கூரிய வேலாயுதந்தரித்த குமரவேளினுக்குப் பால், இளநீர், எண்ணெய் கனிகளிவையெலாங் கொண்டு திருமஞ்சனம் செய்விப்போர்கள், அமரருலகினில் விண்ணவரெலாங்கூடி பனிநீராதி தேவநதி தீர்த்தங்களினால் ஸ்நானஞ்செய்விக்கப்பெற்றும், அமுதூட்டி அரம்பைமாதர்களால் அணையப்பெற்றும், பின்னர் பரமபத வாழ்வினையும் அடைவார்கள். அத்தலத்தமர்ந்துள்ள அறுமுகனுக்கு ஓர் வஸ்திரந்தனை அன்புடனளிப்போர்கள் அமரர்கள் பணிய அருமையான பீதாம்பரந்தரிப்பர். ஆபரணந்தந்தோர்கள் நவமணிகளும் எண்ணியவைகள் யாவும் பெற்றுய்வார்கள். கார்த்திகைமாதர்களின் திருமுலைப்பாலினையுண்ட கந்தவேளினுக்கு, மதுரமிக்க அறுசுவையுடன் கூடிய அன்ன நிவேதனஞ்செய்வோர், வானுலகத்ததிபராய், அரியதினும் அரியதாய அமிர்தத்தினை நாடோறும் புசித்து, என்றென்றும் பசிப்பிணியிலாப் பேறடைவார். அத்தலத்தின்கண்ணே செய்யும் தர்மமானது அணுவத்தனையாயினும், மகாமேருபர்வதத்தினளவினதாகும். அத்தலத்தினிற் செய்த பாபமானது எவ்வளவாயினும் தினையளவினதாகும். முருகவேளினை முக்காலமுங்கண்டு தரிசித்தவர்களின் வினைகளெலாமகன்று, மிக்கமேன்மைகளெல்லாம் பெற்று மகிழ்வார்கள். அவர் சிறப்பினை ஈங்கெடுத்து இயம்ப யாவரே வல்லவராவார்கள்? அத்திருமயிலையங்கிரியினில் ஒருபகலிருந்தோர் மன்னராகி மாநிலம்புரப்பர். ஒருமாதமிருந்தவர் தவச்சிரேஷ்டராவார்கள். ஓராண்டிருந்தோர் வானுலகினையாள்வார். ஒவ்வொருமாதக் கார்த்திகைநக்ஷத்திரத்திலும், திருமயிலையங்கிரியினையடைந்து, ஆங்குள தீர்த்தங்களில் மூழ்கி, எம்மையனையர்ச்சிப்பவர்கள்

சகலமான மனோபீஷ்டங்களையுமடைந்து, மேன்மையுற்று வாழ்ந்திடுவார்கள். பங்குனிமாதம் நடக்கும் உற்சவத்தில், பூரம் உத்திரம் என்னும் நக்ஷத்திரங்களில், வானளாவுந் தேர்மிசையூர்ந்துவரும் தேவதேவனுகுஞ் சிவசுப்பிரமணியக்கடவுளரைக் கண்டு தரிசனஞ்செய்தோர், அவனது சாருபத்தினையேயடைந்து மகிழ்வார்கள். பின்னும் அத்தலத்தினை அமரேந்திரன் முதலிய அஷ்டதிக்பாலகர்களும், அளக்கரிய தவச்சிரேஷ்டர்களும் இயக்கரும், சித்தரும், சாத்தியரும், மற்றுள தேவர், முனிவர் முதலியோர்களுங் கண்டு தரிசித்துப் போற்றிட, விண்ணுலகத்தினிலிருந்து மண்ணுலகத்தினை யடைவார்களெனில், மற்றும் இத்தலத்தினிற்கொப்பாகுந்தலமெத்தலமாகுமென யாம் உரைப்போம்.

* துன்னுகதிர்வேற்குமரப்பெம்மானின்பந்தூயதவச்சிவஞான
பாலசித்தற்,
கன்றுதருமயிலைமலைப்புராணந்தன்னையகநிறைபேரன்பினெடு
மனுகிக்கேட்போர்,
வென்றியுயர்புகழ்பெறுவர்கல்விமேன்மைவிழுச்செல்வமனைபுதல்வர்
பேறுமேவிப்
பொன்றலிலாவானுலகபோகமூழ்கிப்புண்ணியசாய்ச்சிவபதத்தைப்
பொருந்திவாழ்வார்.

இத்தகைய சிறப்புற்றேங்கும் இம்மயிலையங்கிரி மான்மியத்தை அதிபக்திவினயத்தோடு படிக்கிறவர்களும், சிரத்தையோடு கேட்கிறவர்களும் நற்புகழும், நற்கல்வியும், நவநிதிகளும், நன்மனைவிமக்களும்பெற்று, தேவருலகுற்று, அரம்பையராதியர் போகமுற்று, அதன்மேல் அழிவில்லாச் சிவபதத்தினையுமடைந்து, சிறந்து வாழ்வார். என்றிவ்வாறுகச் சூதபுராணிகர் திருமயிலையங்கிரி முருகனது திவ்விய லீலைகளையும், மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலிய மகிமைகளையும், சாங்கோபாங்கமாக எடுத்துக்கூற, அதனைக்கேட்ட சௌனகாதி மகரிஷிகளும், புளகாங்கிதமுற்று கண்களில் ஆனந்தபாஷ்பம்பெருக, முருகனின் இருபதமலர்களையும் இறைஞ்சி வாழ்த்தி இனிதேமகிழ்ந்திருந்தனர். சுபம்.

வந்தவேளையெறித்தலர்க்கண்ணுன் தந்தவேளைதைத்தியர்காலனை
எந்தவேளையுமென்னுளநீங்கலாக் கந்தவேளைக்கருத்திலிருத்துவாம்.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு முகப் பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணைவா ருதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி.

முருகநின்பாதம்போற்றிமுளரியங்கண்ணற்கன்பாம்,
மருகநின்கழல்கள்போற்றிவானவர்முதல்வபோற்றி,
பெருகருள்வாரிபோற்றிபெருங்குணப்பொருப்பேபோற்றி
தருகநின்கருணைபோற்றிசாமிநின்னடிகள்போற்றி.

வேதமுங்கலைகள்யாவும்விளம்பியபுலவபோற்றி,
நாதமுங்கடந்துநின்றநாதனின்கருணைபோற்றி,
போதமும்பொருளுமாகும்புநிதநின்பாதம்போற்றி,
ஆதரமாகியென்னுள்அமர்ந்தவென்னரசேபோற்றி.

* வாழிமாமயில்வேதண்டம்வளரறம்வேதம்வாழி
வாழியெம்பாலசித்தன்மலரடிநிரைகோன்வாழி
வாழியாறெழுத்துகண்டிமன்னியபூதிவாழி
வாழிநல்லடியார்வானம்வளங்கெழுமுலகம்வாழி.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெ லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

ஸ்ரீ மயிலையங்கிரி மான்மியச்சுருக்கம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ சிவகுருதிருமுருகன் திருவடிகளே சரணம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ஓம் தத் ஸத்.

சுபம்.

* ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகளியற்றிய

மயிலம் திருப்புகழ்.

தனதந்த தானன தான தான
தனதந்த தானன தான தான
தனதந்த தானன தான தான தனதான

கொலைகொண்ட போர்விழி கோலோ வாளோ
விடமிஞ்சு பாதக வேலோ சேலோ
குழைகொண்டு லாவிய மீனோ மானோ எனுமானார்

குயில்தங்கு மாமொழி யாலே நேரே
இழைதங்கு நூலிடை யாலே மீதார்
குளிர்கொங்கை மேருவி னாலே நானு விதமாகி

உலைகொண்ட மாமெழு காயே மோகா
வலையம்பு ராசியி னூடே மூழ்கா
வுடல்பஞ்ச பாதக மாயா நோயால் அழிவேனோ

உறுதண்ட பாசமொ டாரா வாரா
எனையண்டி யேநம னார்தூ தானோர்
உயிர்கொண்டு போய்விடும் நாள்நீ மீதா அருள்வாயே

அலைகண்ட வாரிதி கோகோ கோகோ
எனநின்று வாய்விட வேநீள் மாசூர்
அணியஞ்ச ராசனம் வேறாய் நீறா யிடவேதான்

அவிர்கின்ற சோதிய வாரார் நீள்சீர்
அனலங்கை வேல்விடும் வீரா தீரா
அருமந்த ரூபக ஏகா வேறோர் வடிவாகி

மலைகொண்ட வேடர்கா னூடேபோய்
குறமங்கை யாளுட னேமா லாயே
மயல்கொண்டு லாயவள் தாள்மீ தேவீழ் குமரேசா

மதிமிஞ்சு போதக மேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழ பாதா நாதா
மயிலந்தன் மாமலை வாழ்வே வானோர் பெருமாளே

சுபம்.

முருகன் துதி.

நிலையுறும்நிராசையாம்உயர்குலப்பெண்டிரொடும்
நிகழ்சாந்தமாம்புதல்வனும்
நெறிபெறும்உதாரகுணமென்னுநற்பொருளும்மருள்
நீக்கும்அறிவாந்துணைவனும்
மலைவறுநிராங்காரநண்பனுஞ்சுத்தமுறும்
மனமென்னும்நல்ஏவலும்
வருசகலகேவலமிலாத இடமும்பெற்று
வாழ்கின்றவாழ்வருளுவாய்
அலையிலாச்சிவஞானவாரியேஆனந்த
அமுதமேகுமுதமலர்வாய்
அணிகொள்பொற்கொடிபசுங்கொடியிருபுறம்படர்ந்து
அழகுபெறவருபொன்மலையே
தலைவர்புகழ்சென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்குகந்தவேளே
தண்முகத்துய்யமணிஉண்முகச்சைவமணி
சண்முகத்தெய்வமணியே.

ஒருமையுடன்நினது திருமலரடிநினைக்கின்ற
உத்தமர்தம்உறவுவேண்டும்
உள்ளொன்றுவைத்துப்புறம்பொன்றுபேசுவார்
உறவுகலவாமைவேண்டும்
பெருமைபெறும்நினதுபுகழ்பேசவேண்டும்பொய்மை
பேசாதிருக்கவேண்டும்
பெருநெறிபிடித்தொழுகவேண்டும்மதமானபேய்
பிடியாதிருக்கவேண்டும்
மருவுபெண்ணாசையைமறக்கவேவேண்டும்உனை
மறவாதிருக்கவேண்டும்
மதிவேண்டும்நின்கருணைநிதிவேண்டும்நோயற்ற
வாழ்வில்நான்வாழவேண்டும்
தருமமிகுசென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்குகந்தவேளே
தண்முகத்துய்யமணிஉண்முகச்சைவமணி
சண்முகத்தெய்வமணியே.

முருகன் கும்மி.

கும்மியடிப்பெண்கள்கும்மியடியிந்தக்
குவலயமெச்சவேகும்மியடி
நம்மையாண்டிடும்நற்குருநாதனை
நாடிக்கும்மியடியுங்கடி—தினம்
பாடிக்கும்மியடியுங்கடி.

குறவர்குடிசைநுழைந்தாண்டி—அந்தக்
கோமாட்டியெச்சில்விழைந்தாண்டி
துறவர்வணங்கும்புகழாண்டி—அவன்
தோற்றத்தைப்பாடியடியுங்கடி.

மாமயிலேறிவருவாண்டி—அன்பர்
வாழ்த்தவரங்கள்தருவாண்டி
தீமையிலாதபுகழாண்டி—அவன்
சீர்த்தியைப்பாடியடியுங்கடி.

பன்னிருதோள்களுடையாண்டி—கொடும்
பாவிகள்தம்மையடையாண்டி
என்னிருகண்களனையாண்டி—அவன்
ஏற்றத்தைப்பாடியடியுங்கடி.

வேங்கைமரமாகிநின்றாண்டி—வந்த
வேடர்தமையெல்லாம்வென்றாண்டி
தீங்குசெய்சூரனைக்கொன்றாண்டி—அந்த
தீரனைப்பாடியடியுங்கடி.

சீர்திகழ்தோகைமயின்மேலே—இளஞ்
செஞ்சுடர்தோன்றுந்திறம்போலே
கூர்வடிவேல்கொண்டுநம்பெருமான்—வருங்
கோலத்தைப்பாருங்கள்கோதையர்காள்.

ஆறுமுகங்களிற்புன்சிரிப்பும்—இரண்
டாறுபுயந்திகழற்புதமும்
வீறுபாஞ்சுடர்வண்ணமுமோர்—திரு
மேனியும்பாருங்கள்வெள்வளைகாள்.

ஆனந்தமானவமுதனடி—பர
மானந்தநாட்டுக்கரசனடி
தானந்தமில்லாச்சதுரனடி—சிவ
சண்முகநங்குருசாமியடி.

வேதமுடிசொல்லுநாதனடி—சதுர்
வேதமுடிதிகழ்பாதனடி
நாதவடிவுகொள்நீதனடி—பர
நாதங்கடந்தநலத்தனடி.

தத்துவத்துள்ளேயடங்காண்டி—பர
தத்துவமன்றித்துடங்காண்டி
சத்துவஞானவடிவாண்டி—சிவ
சண்முகநாதனைப்பாடுங்கடி.

சச்சிதானந்தவுருவாண்டி—பர
தற்பரபோகந்தருவாண்டி
உச்சிதாழன்பர்க்குறவாண்டி—அந்த
உத்தமதேவனைப்பாடுங்கடி.

அற்புதமானஅழகனடி—துதி
அன்பர்க்கருள்செய்குழகனடி
சிற்பரயோகத்திறத்தனடி—அந்தச்
சேவகன்கீர்த்தியைப்பாடுங்கடி.

சைவந்தழைக்கத்தழைத்தாண்டி—ஞான
சம்பந்தப்பேர்கொண்டழைத்தாண்டி
பொய்வந்தவுள்ளத்திற்போகாண்டி—அந்த
புண்ணியன்பொன்னடிபோற்றுங்கடி.

வாசிநடத்தித்தருவாண்டி—ஒரு
வாசியிலிங்கேவருவாண்டி
ஆசில்கருணையுருவாண்டி—அவன்
அற்புதத்தாண்மலரேத்துங்கடி.

இராப்பகலில்லாவிடத்தாண்டி—அன்பர்
இன்பவுளங்கொள்நடத்தாண்டி
அராப்பளியீந்ததிடத்தாண்டி—அந்த
அண்ணலைப்பாடியடியுங்கடி.

ஒன்றிரண்டானவுளவாண்டி—அந்த
ஒன்றிரண்டாகாவளவாண்டி
மின்றிரண்டன்னவடிவாண்டி—அந்த
மேலவன்சீர்த்தியைப்பாடுங்கடி.

சீகாழி சுந்தரா பிரஸில், அச்சிடப்பட்டது.

1. ஸ்ரீமயிலேயங்கிரி மான்மியச்சுருக்கம் விலை ரூ 0— 4—0.

2. திருமயிலேயங்கிரி முருகாலங்காரம் விலை ரூ 0— 2—0.

3. ஸ்ரீ ராதாகிருஷ்ண சரிதாமிர்த ஸாரஸங்கிரஹம் தமிழில் சரித்திரமும், ஸம்ஸ்கிருதத்தில் ஸ்தோத்திரங்களும் அடங்கியது. புஸ்தகம் 1-க்கு தபாற்செலவு உள்பட விலை ரூ 0—10—0.

தமிழ் சரித்திரம் மட்டில் உள்ள புஸ்தகம் 1-க்கு தபாற் செலவு உள்பட விலை ரூ 0— 6—0.

ஸம்ஸ்கிருதத்தில் ஸ்தோத்திரங்கள் மட்டிலுள்ள புஸ்தகம் 1-க்கு தபாற்செலவு உள்பட விலை ரூ 0— 6—0.

4. அருணாசலக்கவிராயர் இயற்றியருளிய சீகாழித் தலபுராணம் தேவாரத் திருமுறைகளும் புராண வசனமும் சேர்ந்தது 1— 4—0

ஷை வசனம், தேவாரத் திருமுறைகளுடன் கூடியது விலை ரூ 0— 6—0.

5. ஸ்ரீமூதவாஹனன் (தமிழ் நாவல்) விலை ரூ 0— 8—0.

ஷை புஸ்தகங்கள் கிடைக்குமிடம் :—

சுந்தரா பிரஸ், சீகாழி.